




# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 8 இதழ் - 1, ஜனவரி - பிப்ரவரி 2022

**R5250**

## SERVICE OF THE BRETHREN A PROPER ZEAL
## சகோதரர்களின் ஊழியம் ஒரு சரியான பக்தி வைராக்கியம்

''உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது.'' - சங்கீதம் 69:9

இந்த வார்த்தைகள் தாவீதின் காலத்தில் இருந்தவர்களுக்கு கவிதைநயம் பொருந்தியதாகவும் மிகைப்படுத்தி கூறியதாகவும் காணப்பட்டிருக்கும். தாவீது உண்மையிலேயே, தேவனுடைய வீட்டிற்காக முதலாவது ஆசாரிப்பு கூடாரத்தின் மேலும், அதைத் தொடர்ந்து ஆலயத்தின் மேலும் வைராக்கியம் உள்ளவனாக இருந்தான். அவன் ஆலயத்தை கட்ட ஆசையாயிருந்தான். ஆனால் அதை கட்ட தேவன் அவனுக்கு அனுமதியளிக்கவில்லை. தாவீது அந்த வீட்டின் மேல் உண்மையாக பக்திவைராக்கியத்தைக் கொண்டிருந்தான்.

இந்த தீர்க்கதரிசனத்திற்கான விளக்கத்தை நாம் புதிய ஏற்பாட்டில் நமது கர்த்தருக்கு அதை பொருத்திப்பார்ப்பதின் மூலம் பெறுகிறோம். இயேசு கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி, காசுக்காரர்களை துரத்தினார். அப்பொழுது சீஷர்கள் நினைவுகூர்ந்து இந்த வார்த்தைகளை கூறினார்கள். "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது." (யோவான் 2:17) அந்த காரியத்தில் ஆலயமானது கர்த்தருடைய வீடாக இருந்தது. சகல வியாபாரிகளையும் துரத்தி ஆலயத்தை சுத்தம் பண்ணின போது கர்த்தரின் வைராக்கியம் சிலரால் மிகவும் சரியானது என்றும் மற்ற சிலரால் மிகக்கடுமையானது என்றும் கருதப்பட்டது.

இன்னும் ஆழ்ந்த பொருளில், சபைதான் அவரது வீடு, தேவனுடைய வீடு என்று குறிப்பிடப்படுகிறது. அப்போஸ்தலர்கள் சபையைப் பற்றி பேசும் போது, நாம் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்று கூறுகிறார். (1 கொரிந்தியர் 6:19) மேலும் நாம் ஜீவனுள்ள கற்களாக கூட்டி கட்டப்பட்டு வருகிறோம் என்று கூறப்பட்டது. (1 பேதுரு 2:4,5) ஆகையால் இயேசு பெற்றிருந்த வைராக்கியம் தேவனுடைய உண்மையான வீடாகிய பிள்ளைகளின் வீடாக இருக்கிறது என்று நாம் காண்கிறோம். யூதர்கள் மோசேயின் கீழாக ஊழியக்காரர்களின் வீடாக இருந்தார்கள். ஆனால் கிறிஸ்துவோ அவரது வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக இருந்தார். "நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்.' ஏனெனில் "உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்." (எபிரேயர் 3:5,6; 1தெசலோனிக்கேயர் 5:24)

### ஊழியத்தின் ஆவி கிறிஸ்துவின் ஆவி

வீட்டைப் பற்றிய இந்த கருத்தை நாம் நமது மனதிற்கு முன்னே வைத்துக்கொண்டு, எந்த வழியில் தேவனுடைய வீட்டைக் குறித்ததான இயேசுவின் பக்தி வைராக்கியம் அவரை எரித்தது என்பதை நாம் பார்க்கலாம். எரித்தது, பட்சித்தது போன்ற வார்த்தைகளை இரும்பு துரு பிடித்தது என்பதற்கு ஒப்பாக பயன்படுத்துகிறோம். ஆகையால் வைராக்கியம் என்பது சூடு, வெதுவெதுப்பு மற்றும் ஜுவாலையை குறிக்கிறது. ஆண்டவர் மற்றும் அவர் அக்கறை கொண்டிருந்த அவரது வீடு பற்றிய இந்த கருத்துகளை நமது மனதிற்கு முன்னே வைத்துக்கொண்டு சிந்திக்கும் போது அநேகரை தேவனுடைய வீட்டிற்குரியவர்களாகவும், தேவனுடைய குமாரர்களாகவும், தேவனுடைய ஜனங்களாகவும் ஆகும்படியாக தமது ஜீவனை கொடுப்பதற்கு அதற்கான அவரது வைராக்கியம், அவரது சக்தி, அவரை ஞாபகப்படுத்தி வழி நடத்தியது என்று நாம் உணருகிறோம். கர்த்தருடைய வீட்டிற்கான, கர்த்தருடைய பிள்ளைகளுக்கான அவரது பக்தி வைராக்கியம், அவர்களுக்கு உதவி செய்வதில் அவரது நேரத்தையும் பலத்தையும் பட்சித்தது.

இந்த சுவிசேஷ யுகத்தில், தம்மோடு கூட பட்சிக்கப்படும் படியாக சபையை கர்த்தர் அழைக்கிறார். அப்போஸ்தலர் தெளிவாக நமக்கு கூறுவது போல, இன்னும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கக் கூடியவர்கள் மட்டுமே, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இந்த கிறிஸ்துவின் ஆவியை பெறுவோமானால் அது தான் ஊழியத்தின் ஆவியாக இருக்கும். அது நம்மை சபையில் ஊழியம் செய்ய ஆயத்தம்படுத்தும் ஒரு பக்தி வைராக்கியமாக, ஓர் ஆர்வமாக, ஒரு சக்தியாக இருக்கும். அவரது சரீரமாகிய அவரது சபையின் ஊழியத்தில் ஆண்டவரோடு கூட நாம் பட்சிக்கப்படுவோம் என்பதே இதன் பொருளாக இருக்கும். (மத்தேயு 20:28; 1யோவான் 3:16)

### தெய்வீக சுபாவத்துக்கு தயார்படுத்துதல்

இப்படிப்பட்ட வைராக்கியத்தை வெளிப்படுத்துவதற்கு பரலோக தளத்தில் இருந்த தேவ புத்திரர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. மனுக்குலத்தின் மீட்பின் இணைவதற்கான ஒரு அழைப்பும் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இந்த சலுகை முதற்பேறானராகிய லோகாசுக்கு கொடுக்கப்பட்டது. நமது ஜீவனை கொடுப்பதற்கு அவருக்க சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. அவர், "தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்; அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகிய தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி..... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:7-9)

நமது கர்த்தரின் பக்தி வைராக்கியம் அவரது பரலோக இல்லத்தை, பரலோக சொத்தை இழக்கச் செய்யவில்லை. ஆனால் அதற்கு மாறாக, தேவன் அவரை ஓர் உயர்ந்த நிலைமைக்கு உயர்த்தினார். அவர் பட்சிக்கப்பட்டார் என்ற கூற்று, உலகிற்கு அவர் கொடுத்த அவரது பூமிக்குரிய ஜீவனைக் குறிக்கிறது. பிதாவானவர் அவருக்கு இன்னும் மேலான சுபாவத்தை, தெய்வீக சுபாவத்தை கொடுத்திருக்கிறார். இந்த பக்தி வைராக்கியம் பட்சிக்கப்படுவது அவரை தெய்வீக சுபாவமாகிய உயர்ந்த பரிசுக்காக தயார்படுத்தியது.

பரிசுத்த பேதுரு கூறுகிறதாவது: "திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை" கர்த்தர் கொடுத்திருக்கிறார். (2 பேதுரு 1:4) அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: "அவரோடு கூட பாடுகளைச் சகித்தோமானால். அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்; அவரோடு கூட மரித்தோமானால் அவரோடு கூட பிழைத்துமிருப்போம்." (1 திமொத்தேயு 2:11,12) நமது பூமிக்குரிய சுபாவம் பட்சிக்கப்பட்டால் பிறகு நாம் தெய்வீக சுபாவத்தை பெறுவோம். "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்." (1கொரிந்தியர் 15:51,52)

தேவனுடைய ஊழியத்திற்கான பக்தி வைராக்கியத்தின் ஒரு நிறைவை வெளிப்படுத்தக்கூடிய இந்த சந்தர்ப்பம் ஆதாமுக்கோ, மனுக்குலத்தில் யாருக்கோ, இந்த சுவிசேஷ யுகம் வரை கொடுக்கப்படவில்லை. இந்த சந்தர்ப்பம் அடுத்த யுகத்தில் தேவனுடைய குமாரர்களுக்கு வராது. அப்பொழுது பலியானது முடிவடைந்திருக்கும். அங்கே பாவமோ, வருத்தமோ, வலியோ, தவிப்போ, அலறுதலோ அல்லது மரணமோ இராது! (ஏசாயா 35:10; 51:11; வெளிப்படுத்தல் 21:4)

"இயேசுவுக்கு இன்னும் ஒரு நாள் வேலை,
எனக்கு வாழ்க்கையில் ஒரு நாள் குறைவு!
ஆனால் பரலோகம் பக்கமாகிறது, கிறிஸ்து
அன்பாகிறார்; நேற்றையைக் காட்டிலும் எனக்கு;
அவரது அன்பும் வெளிச்சமும் என் ஆத்துமாவை
நிரப்பும் இன்றிரவு!

"இயேசுவுக்கு இன்னும் ஒரு நாள் வேலை!
எவ்வளவு மகிமையாயிருக்கிறார் என் ராஜா!
இது களிப்பு, கடமையல்ல, அவரது அழகை காண்பிப்பது;
எனது ஆத்துமா சிறகடித்து பறக்கிறது,
எப்படி கிறிஸ்து எனது ஜீவனை வாங்கினார்
என்ற வெறும் எண்ணத்தினாலேயே,

"இயேசுவுக்கு இன்னும் ஒரு நாள் வேலை!
எவ்வளவு இன்பமாக இருக்கிறது வேலை,
கதையை சொல்வது, மகிமையை காண்பிப்பது,
எங்கே நுழைகிறது, கிறிஸ்துவின் மந்தை!
எப்படி அது பிரகாசித்தது எனது தாழ்மையான இதயத்தில்!

இயேசுவுக்காக ஆசீர்வதிக்கப்பட்ட வேலையே!
இயேசுவின் பாதத்தில் ஓய்ந்திரு!
உழைப்பு அங்கே களிப்பை காண்கிறது,
எனது தேவை புதையல்,
அவருக்கான வேதனை இன்பமாயிருக்கிறது.
கர்த்தாவே, நான் இருந்தால் இன்னொரு நாள் வேலை செய்வேன்!

**R5258**

## Spritual Vision Preportionate to Heart Purity

## இருதய தூய்மைக்கு ஏற்ப ஆவிக்குரிய காட்சி

"கர்த்தருடைய பாத்திரங்களை சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களை சுத்திகரியுங்கள்." ஏசாயா 52:11

ஆசாரிப்புக் கூடாரத்திலும் இன்னும் ஆலயத்திலும் உள்ள கர்த்தருடைய பாத்திரங்கள் என்பது பிரகாரம், பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம் ஆகியவற்றின் ஆராதனைகளில் தொடர்புடைய பாத்திரங்கள் ஆகும். அவைகள் கொக்கிகள், தூபகலசம், சட்டிகள், வெட்டுக்கத்திகள், கிண்ணங்கள், குடிகலங்கள் முதலான விலையேறப்பெற்ற பாத்திரங்கள் உள்ளடக்கியதாகும். பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் பயன்படுத்தப்பட்டவைகள் பொன்னினாலும், பிரகாரத்தில் பயன்படுத்தப்பட்டவைகள் பித்தளையினாலும் செய்யப்பட்டவைகள்.

இவைகளையெல்லாம் அர்ப்பணம் செய்து கொண்ட வகுப்பார் மட்டுமே கையாள அனுமதிக்கப்பட்டனர். இவைகளை ஆசாரியர்கள் மட்டுமே பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் குறிப்பிட்ட ஆராதனையில் பயன்படுத்தினார்கள். குறைவான முக்கியமுள்ள ஆராதனைகளில் லேவியர் பயன்படுத்தினார்கள். ஆகையால் பாத்திரங்கள் ஆசாரியர் மற்றும் லேவியரால் மட்டுமே கையாளப்பட்டன. பாத்திரங்கள் பயன்படுத்துவற்கு முன்பும் கழுவப்படுவதற்கு முன்பும் அதைப் பயன்படுத்துபவர்கள் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும். பாத்திரத்தை சுமக்கிற ஒவ்வொருவரும் கழுவப்பட வேண்டும். இது பாவம் போக கழுவப்படுவதற்கு அடையாளமாக இருந்தது.

உண்மைப் பொருளில் நமது கர்த்தர் தான் மகா பிரதான ஆசாரியர். தேவனுடைய பார்வையில் ஆசாரியத்துவத்துக்கு தகுதியுள்ளவர்களாக காணப்படுகிறவர்களும் மகிமையில் ஆசாரியர்கள் அமைப்பதற்காக சோதனைகளில் இருப்பவர்கள் மட்டுமே அவரது மிகவும் உண்மையுள்ள பின்னடியார்களாக இருக்கிறார்கள். ஆனால் அர்ப்பணம் செய்த அனைவரும் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை அணிந்திராதவர்களும், இப்படியாக தேவனுடைய பார்வையில் நீதிமான்களாக காணப்படாதவர்களும் விலையேறப்பெற்ற சத்தியமாகிய பரிசுத்த பொருட்களை கையாள தகுதியற்றவர்களாக இருக்கின்றனர்.

நமது தலைப்பு வசனத்தில் தீர்க்கதரிசியின் அறிவுரையில் நிழலில் எல்லாம் சுத்தமாயிருப்பது அவசியமாக இருப்பதால் அதே போல நாமும் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" தற்காலத்தில் நாம் மாம்சத்தில் பூரணமுள்ளவர்கள் அல்ல. நாம் கிறிஸ்துவுக்குள் வந்திருக்கும் போது, இந்த மாம்சீக பலவீனம், கிறிஸ்துவின் புண்ணியமாகிய, நீதியை குறிப்பிடுகிற பரிசுத்தமான வெண் வஸ்திரத்தினால் மூடப்பட்டவர்களாவோம். நாம் அவரில் தரித்திருக்க வேண்டும். நாம் மாம்சத்தில் இருக்கும்

வரை, பரிசுத்தமாயிருப்பதற்கு கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை பெற்றிருக்க வேண்டும்.

ஆசாரியர்கள் தங்கள் வஸ்திரங்கள் சுத்தமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அதே போல நாம் நமது மாம்சீக அழுக்குகளையெல்லாம் நீக்கிப் போட்டு நமது வஸ்திரங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறோம். சபையானது எந்தவித கறைதிரையும் இல்லாமல் பரிசுத்தமாயிருக்கும் என்று அறிவிக்கப்படுகிறோம். (எபேசியர் 5: 26,27) இது எப்படி நடக்கும் என்று ஆச்சரியப்படுவோமானால், அது எப்படி நடக்கும் என்று வேத வாக்கியங்கள் காண்பிக்கின்றன. நமக்கு நீதியின் வஸ்திரம் கொடுக்கப்பட்ட போது நமது கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட்டன. தவிர்க்க இயலாத தோல்விகள், சோதனைகள் மற்றும் பலவீனத்தினாலும் வரக்கூடிய பாவங்கள் அனைத்தையும் தேவன் சுத்தப்படுத்திக் கொண்டு வருகிறார் என்று இது பொருள்படுகிறது. ஆனால் இங்கே வேண்டுமென்றே செய்த பாவங்களுக்கான சுத்தப்படுத்துதலை பற்றி கொடுக்கப்படவில்லை.

## இருதயத்திலே சுத்தம் அத்தியாவசியம்

நாம் இப்பொழுது புது சிருஷ்டிகளாக இருந்து, வேண்டுமென்றே தெரிந்து செய்யக்கூடிய பாவங்கள் இல்லாதிருந்து புது சிருஷ்டியாக தொடர்ந்து இருக்க வேண்டும். ஏனெனில் புது சிருஷ்டியானது பரிசுத்தமான கிறிஸ்துவின் சிந்தையை எடுத்துக்காட்டுகிறது. மாம்சத்தில் இணைக்கப்பட்டிருக்கிற எந்தவித பலவீனம் மற்றும் அபூரணங்கள் அனைத்தும் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தினால் மூடப்படுகின்றன. உதவி தேவைப்படும் போதெல்லாம் கிருபையை அடையும்படிக்கு பரம கிருபாசனத்தண்டையில் நாம் சேருகிறோம்.

இந்த வசனம் தற்காலத்திற்கு ஏற்றதாக காணப்படுகிறது. அது கர்த்தரின் நாளில் பொருந்தக்கூடியதாக இருந்தது. அவர் பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரு –மாயிருந்தார். அது அப்போஸ்தலரின் காலத்துக்கு பொருந்தக்கூடியதாக இருந்தது. இவர்கள் அனைவரும் சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமில்லாதிருந்த ஒருவன் யூதாஸ். அவனது அழிவுக்கே சென்று விட்டான். அவன் இரண்டாம் மரணத்திற்கு சென்று விட்டான் என்று நினைக்கிறோம். ஏனெனில் அவனுக்கு கொடுக்கப் –பட்டிருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த தவறி விட்டான்.

யூதாசுக்கு தவறுவது சாத்தியமாக இருந்தது போல நமக்கும் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ தவறுவது சாத்தியமாக இருக்கிறது. அவன் இருதயத்தில் சுத்தமில்லாது இருந்ததினாலும், பணத்தை நேசித்ததாலும், தெய்வீக ஊழியத்திலிருந்து நீக்கப்பட்டான். அதே போல இருதயத்தில் சுத்தமில்லாத அனைவரும் இந்த ஊழியத்திலிருந்து நீக்கப்படுவார்கள். இருதயத்தில் சுத்தமில்லாத யாரும் இந்து ஊழியத்தில் வைக்கப்படமாட்டார்கள். அதே போல அவர்கள் பரிசுத்தம் இல்லாவர்களானால் அதிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இது அனனியா மற்றும் சப்பீராளின் காரியத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பண ஆசையினாலும் ஏமாற்ற முயற்சித்தாலும் அவர்கள் ஆசாரியத்துவத்தி –லிருந்து நீக்கப்பட்டார்கள். புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட சீமோன் மேகஸ் இன்னும் மற்றவர்களின் காரியத்தை நாம் நினைவு கூருகிறோம். சிலர் இருதயத்தில் தீட்டுப்பட்டிருப்பார்கள், மற்றவர்கள் அதை அறியமாட்டார்கள். வேத வாக்கியங்கள் கூறுவது போல சிலர் மனிதர்களிடையே மிகவும் மதிப்புடையவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய பார்வையில் மிகவும் மதிப்புடையவர்களாக இருக்க மாட்டார்கள். சிலர் மனிதர்களிடையே அவ்வளவு மதிப்புடையவர்களாக இருக்க மாட்டார்கள், ஆனால் தேவனுடைய பார்வையில் மிகவும் மதிப்புடையவர்களாக இருப்பார்கள். "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." (1யோவான் 3:1)

## தற்காலம் நீதிக்கு எதிரானதாக இருக்கிறது

பிரசங்க மேடையை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள், தங்களை தேவனுடைய உண்மையான ஊழியர்களாக மதித்துக் கொண்டு இப்படியாக மற்றவர்களாலும் மதிக்கப்பட்டவர்களாக தேவனுடைய வசனத்தை மதிக்காமல் இருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. சில சாத்தானுடைய ஊழியர்கள் தேவனுடைய ஊழியர்களாக எண்ணப்படுவதாக வேதாகமம் நமக்கு கூருகிறது. (2 கொரிந்தியர் 11:13-15; வெளிப்படுத்தல் 2:2; 3:9) அவர்களில் சிலர் தங்களுக்கு விசுவாசமோ, தேவனோ இல்லையென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்களில் சிலர் இயற்கையின் தேவன் தான் என்று கூறுகிறார்கள். வேறு சிலர் தங்கள் தேவனை நம்புவதாகவும் ஆனால் வேத வாக்கியங்களை நம்பவில்லை என்று கூறுகிறார்கள்.

எந்த விதத்திலும் இவர்கள் கர்த்தருடைய வீட்டின் பாத்திரங்களை சுமப்பவர்கள் என்று நாம் எண்ண முடியாது. அநேகமாக அவர்கள் பாத்திரங்களை சுமந்ததேயில்லை. அல்லது ஒரு வேளை அவர்கள் கொஞ்ச காலம் அதை செய்து, பிறகு தப்பறைக்கு சென்று, பிரகாரம் நிலைமையையும் தாண்டி, கிறிஸ்துவின் சிலுவையின் சத்துருக்களாக ஆகியிருக்கலாம். (பிலிப்பியர் 3:18)இப்படிப்பட்ட சிலரைக் குறித்து அப்போஸ்தலர் பவுல் சத்தியத்தை அநியாயத்தினால் அடக்கிவைக்கிறவர்கள் என்று கூறுகிறார். (ரோமர் 1:18)

இன்னொரு நிரூபத்தில் அப்போஸ்தலர் கிறிஸ்துவை பொறாமையினால் பிரசங்கிக்கிறவர்களைப் பற்றி பேசுகிறார். ( பிலிப்பியர் 1:15,16 ) இங்கே அவர் கர்த்தரின் பாத்திரங்களை சுமக்கிறவர்களாக எந்த விதத்திலும் குறிப்பிடவில்லை. கிறிஸ்துவை அறியாதவர்களாயிருந்து கிறிஸ்து இருக்கிறார் என்கிற உண்மைக்கு தங்களது கவனத்தை இழுக்கிறவர்களை அவர் குறிப்பிடுவதாக தெரிகிறது. சத்தியத்தின் குறிப்பிட்ட அம்சங்களுக்கு சிலர் தங்களது கவனத்தை ஈர்க்கிறது போல, கிறிஸ்து இருக்கிறார் என்ற ஒரு உரிமை கோரலை முன்னே வைக்கிறதை அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இவர்களை எந்த விதத்திலும் கர்த்தரின் பாத்திரங்களை சுமப்பவர்களாக நினைக்கிறதில்லை. மாறாக எதிரிகளாகவே நினைப்போம்.

கர்த்தரின் வீட்டின் பாத்திரங்களை சுமப்பவர்கள் தற்காலத்தில் ஒரு விசேஷித்த வல்லமையையும் செல்வாக்கையும் பெற்றிருப்பார்கள். நமது தலைப்பு வசனத்தின் பத்தியில் குறிப்பிடுவதாக தெரிகிறது. இது இந்த கூற்றில் காணபிக்கப்படுகிறது: "சமாதனத்தைக் கூறி நற்காரியங்களை சுவிசேஷமாக அறிவித்து, இரட்சிப்பை பிரசித்தப்படுத்தி உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார் என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாய் இருக்கின்றன." (ஏசாயா 52:7) இந்த வசனம் முற்காலத்தைக் காட்டிலும் தற்போது மிகவும் பொருத்தமுடையதாக காணப்படுகிறது. ஏனெனில் ராஜ்ய ஆளுகைக்கான நேரம் இங்கு இருக்கிறது. இந்த செய்திக்கான நேரம் சமீபமாயிருக்கிறது. தேவனுடைய ராஜ்யம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும்; பரிசுத்தவான்களைக் கூட்டிச் சேர்த்தல் முடிவடையும்

வேளையாயிருக்கிறது என்றும் நாம் நம்புகிறோம். இந்த வகுப்பார் நிறைவடைதலுடன் ராஜ்யத்தின் தொடக்கம் வரும்.

ஒவ்வொரு ஜீவிக்கும் செய்தி போதிக்கப்படுகிற காலம் நெருங்கியிருக்கிறது என்றும் இந்த தலைப்பு வசனம் காண்பிக்கிறது. இது இப்பொழுது கூட நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அநேகர் சகல காரியங்களின் மறுசீரமைப்பையும் தெய்வீக திட்டத்தின் மகிமையான பலன்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த செய்தியை அறிவிக்கிறதில் ஈடுபடுகிற அனைவரும் சுத்தமாயிருக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்

### இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே சத்துருவின் இலக்கு

தேவனுடைய ஜனங்களை மாசுபடுத்தக்கூடிய பாதகமான செல்வாக்குகள் உலகத்தில் செயல்பாட்டில் இருக்கிறது என்கிற அறிவிப்பு வேத வாக்கியத்தில் எங்கும் காணப்படுகிறது. அவர்கள் அனைவரும் சொந்த மாம்சத்தின் பலவீனத்தினால் போதுமான அளவு சோதனைகளை பெற்றிருந்து, அதை கடந்து வர வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் கூறுகிறோம். ஆனால் இவைகளுக்கு எதிராக போராட வேண்டியதில்லை என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. விழுந்து போன தூதர்கள் மறைவான செல்வாக்குகள் மூலம் கிரியை செய்கின்றன. அவர்கள் மாசுபடுத்த விசேஷமாக பரிசுத்த வகுப்பினரை மாசுபடுத்த, நோக்கங் –கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அனைவரையும் மாசுபடுத்த நோக்கங்கொண்டிருக்கிறார்கள்.

அதிக பரிசுத்தமுடையவர்கள் அதிக நிச்சயமான இலக்காக இருப்பார்கள். மற்ற பறவைகளைக் காட்டிலும் பலவர்ண மற்றும் புள்ளிகள் உள்ள பறவைகளை வேட்டைக்காரர்கள் விரும்புவார்கள் என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இதனால் கர்த்தரின் வீட்டின் பாத்திரங்களை சுமப்பவர்களே பொல்லாதவனின் ஈட்டிகளை எய்யும் இலக்குகளாக இருக்கிறார்கள். ஆகையால் நாம் உலகம், மாம்சம் மற்றும் சத்துருவுக்கு எதிராக போராட வேண்டும். சுத்த இருதயமுள்ளவர்கள், இருதயத்தை நல்ல நிலைமையில் வைத்திருப்பவர்கள், கர்ததரின் பிள்ளைகளாக ஊக்கமுடன் இருப்பவர்கள் தங்களது வஸ்திரங்களை சுத்தமாக வைத்திருக்க ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் ஜாக்கிரதையாக இல்லையென்றால், நிச்சயமாக அவர்களது வஸ்திரம் கறைபடும். சாத்தான் அவர்களை தொடும்படி விசேஷமாக முயற்சித்துக் கொண்டிருப்பான். அவன் தொடுகிற இடமெல்லாம் மாசுபடும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பொல்லாதவனால் தொடப்படுகிறவர்கள் ஓர் அளவு காயத்தை பெறுகிறார்கள். தொடப்படுவதற்கு முன்பாக அவர்கள் ஒரு அளவான குற்றம் உடையவர்களாக இருப்பார்கள்.

ஒருவர் எந்த அளவுக்கு மாசடைந்து அசுத்தமாக ஆனாரோ அந்த அளவுக்கு கர்த்தரின் வீட்டின் பாத்திரங்கள் ஒப்படைக்கப்பட தகுதியற்றவர்களாக இருப்பார்கள். இது என்ன அர்த்தம் கொடுக்கிறது என்பதை தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் அவர்களது அனுபவம் மூலம் சொல்லக்கூடும். தேவனுடைய பிள்ளைகளின் இருதய சுத்தம் மற்றும் தெளிவான ஆவிக்குரிய காட்சிக்கு ஏற்ப இது அவர்களது அனுபவமாக இருக்கிறது. அவர்கள் இந்த பரிசுத்தத்திலிருந்து விலகுகிற அளவுக்கு தக்கதாக சத்திய பாத்திரங்களை சுமப்பதற்கும் ஊழியத்திற்கும் குறைவான சந்தர்ப்பத்தை பெறுவார்கள்.

**R5259** **Individual Claims for Retribution**

## சரியான தண்டனைக்கான தனிப்பட்டவரது கோரிக்கைகள்

"இவர்கள் மேல் இந்த பாவத்தை சுமத்தாதிரும்."**-** அப்போஸ்தலர் 7:60

பரிசுத்த ஸ்தேவான் தான் பலியாகும் போது, "ஆண்டவரே, இவர்கள் மேல் இந்த பாவத்தை சுமத்தாதிரும்" என்று கூறினார். அவர் தன்னை கொல்லுகிறவர்களை எப்படி கையாள வேண்டும் என்று தேவனுக்கு உத்தரவிட்டார் என்று இதை நாம் புரிந்துகொள்ளக்கூடாது. அல்லது இந்த ஜனங்களின் சகல பாவங்களையும் மன்னிக்க வேண்டும் என்று மன்றாடினார் என்று நாம் நினைக்கக்கூடாது. "இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதிரும்" என்று இந்த விஷயத்தை நாம் சுருக்க வேண்டும்.

பரிசுத்த ஸ்தேவானைப் பொருத்தவரை, சரியான தண்டனைக்கான நீதியின் மேல் எந்தவித விசேஷித்த கோரிக்கையும் இருந்ததில்லை. இப்படி யாராவது கோரியிருக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. அநியாயமாக பாடுபடுகிறவர்கள் சரியான தண்டனையை கோருவதாக தெரிகிறது என்பதே இதற்கு பதில். நமது பொதுவான நீதிமன்றங்களில் சில குற்றங்களும், அநீதியான செயல்களும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சம்பந்தப்பட்ட தனி நபர் குற்றம் சாட்டவில்லை என்றால் மற்றவர்கள் யாரும் தொடப்படவே மாட்டார்கள்.

பரிசுத்த ஸ்தேவானின் விஷயத்தில் அவருக்கு தீங்கிழைத்தவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டப்படுகிறது என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். அவர்கள் முன்னரே, மானிட குடும்பத்தின் அங்கத்தினராக ஆதிபாவங்களினால் கறைபட்டிருந்தார்கள். அவர்கள் முன்னரே மரண தண்டனைக்கு கீழாக இருந்தார்கள். அவர்களது பாவங்களுக்காகவும் உலகத்தின் பாவங்களுக்காகவும் மீட்கும் பொருளை கொடுக்கிற வேலையை கர்த்தராகிய இயேசு முன்னரே கொடுக்க ஆரம்பித்திருந்தார். தேவன் தமது நேரத்திலும் வழியிலும் இந்த பாவிகளை நியாயந்தீர்ப்பார். ஆகவே அவர்கள் செய்த தீமையான குற்றங்களுக்கு ஏற்றாற்போல் நீதியான கூலியைப் பெறுவார்கள்.

இயேசுவின் எந்த ஒரு சரீர அங்கத்தனருக்கு எதிரான குற்றங்கள் பிராயசித்தம் பண்ணப்பட வேண்டும் என்று அவர் அறிவிக்கிறார். கர்த்தரின் பிள்ளைகளில் ஒருவருக்கு கெடுதல் செய்தல் தேவனுடைய பார்வையில் குறிப்பாக தீமையாகவும் தண்டனைக்குரியதாகவும் இருக்கிறது. ஏனெனில் இவர்கள் தேவனுடன் ஒரு விசேஷித்த உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கிறார்கள். ஆனால் உலகமானது இந்த தெய்வீக நீதியின் பாதுகாப்பிற்கு வெளியே இருக்கிறது.

வேதாகமத்தின் பொதுவான மொழிபெயர்ப்பில் "பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று கர்த்தர் சொன்னதாக சொல்லப்பட்ட வார்த்தைகள் கிரேக்க பூர்வீக பிரதியில் காணப்படவில்லை. இப்படிப்பட்ட ஜெபத்தை நமக்காக ஏறெடுப்பதைப் பார்க்கிலும் அது இயேசுவுக்கு கடினமானதாக இருந்திருக்கும். ஏனெனில் மனிதனுக்குள் என்ன இருக்கிறது என்பதை அவர் அறிவார் என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. நாம் அறியோம்: நாம்

மனிதனைப் பற்றி ஏறெடுக்கும் ஜெபம் இயேசு ஏறெடுக்கும் ஜெபத்திற்கு மிகவும் வேறானதாக இருக்கும். ஆகையால் பரிசுத்த ஸ்தேவானின் வார்த்தைகளை நினைக்கும் பொழுது இந்த வார்த்தைகளை நாம் கவனிக்காமல் விட்டுவிட வேண்டும்.

## பிரமாணத்திற்கு கீழாக பொதுவான மற்றும் விசேஷித்த உரிமைகள்

அப்படிப்பட்ட ஒரு ஜெபத்தை ஏறெடுப்பதில் பரிசுத்த ஸ்தேவானின் உரிமையும் கடமையும் எந்த அளவுக்கு இருந்தது என்று நாமே கேட்டுக்கொள்கிறோம். அவர் அப்போஸ்தலர்களில் ஒருவராக இருந்திருந்தால், இந்த கேள்வியை கேட்டிருக்கமாட்டோம். அவர் சரியாக ஜெபித்தார் என்று எண்ணியிருப்போம். வேத வாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த வார்த்தைகள் நம்மை போன்ற ஒருவரிடமிருந்து வந்தது என்ற உண்மையைத் தவிர வேறு எதையும் நிரூபிக்கவில்லை. நமது பொதுவான சட்டத்தில் இந்த கொள்கை இருப்பதாக தெரிகிறது. ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் சட்டத்தின் பொதுவான உரிமைகளோடு கூட சில உரிமைகளை பெற்றிருப்பதாக தெரிகிறது, இந்த சில விசேஷித்த உரிமைகளை சந்தர்ப்பம் வந்தால் அதை அவர் கேட்கலாம் அல்லது கேட்காமல் விடலாம். பரிசுத்த ஸ்தேவான் விஷயத்தில் நீதியின் உரிமை கோரலை தள்ளுபடி செய்ய உரிமை பெற்றிருந்து அப்படியே செய்தார் என்ற நாம் புரிந்து கொள்ளுகிறோம். "நான் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. என் பட்சத்தில் பழிவாங்கும்படி கேட்கவில்லை" என்று அவர் கூறியிருந்தது போல் இருக்கிறது

பிறகு, பழிவாங்கும்படி கேட்கிற உரிமையை அவர் பெற்றிருந்தாரா என்கிற கேள்வி எழுகிறது. இல்லையென்று நாங்கள் நினைக்கிறோம். நமது கர்த்தரின் அறிவுரையாவது: "ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்." (லூக்கா 6:23) ஆனால் நீதியின் பொதுவான கொள்கைகளை பொருத்தவரையில் நாம் தலையிடக் கூடாது. பரிசுத்த ஸ்தேவான் "பரலோகப் பிதாவே அவர்களை பழிவாங்கும்படி நான் கேட்கவில்லை. எனக்கு விரோதமாக அவர்கள் செய்த இந்த பாவத்திற்கு அவர்களை விசேஷமாக பொறுப்பாக்க வேண்டாம்" என்று கூறுவது போல அவரது ஜெபம் மிகவும் சரியான வரையறைக்குள் இருந்தது.

## சத்தியத்தின் மேலுள்ள அக்கறையை பாதுகாத்தல் ஒரு கடமை

நமது சத்துருக்களை சிநேகிக்கும்படியும் நம்மை வெறுக்கிறவர்களுக்கு நன்மை செய்யும்படியும், நம்மை நிந்திக்கிறவர்களுக்கும் துன்பப்படுத்துகிறவர்களுக் -காகவும் ஜெபிக்கும்படியும் நமது கர்த்தரால் அறிவுறுத்தப்படுகிறோம். அப்படியானால் நீதிக்காக முறையிடுவது எப்பொழுதும் நமது உரிமையாக இருக்கும் என்ற கேள்வி எழுகிறது. "பிதாவே அவர்களை மன்னியும், நான் அவர்களை மன்னிக்கிறேன்" என்று எப்பொழுதும் சொல்ல வேண்டுமா? நீதிமன்றம் அவர்களுக்கு எதிராக எதுவும் செய்யக்கூடாது என்று நாம் விரும்ப வேண்டுமா? இல்லை. கர்த்தருக்கான காரியங்கள் அதில் ஈடுபட்டிருந்தால் சத்தியத்தை பாதுகாக்கிறதற்காக ஏதாவது சொல்வது நமது கடமையாக இருக்கிறது. ஆனால் நமது சொந்த காரியங்களில் அல்ல.

உலகமானது நமது நோக்கத்தை நிச்சயமாக புரிந்து கொள்ளாது. ஏனெனில் அவர்கள் தங்கள் சொந்த காரியங்களைத் தவிர வேறு எதற்கும் செயல்பட மாட்டார்கள். இதன் விளைவாக நாம் நமது சொந்த காரியங்களுக்காக செயல்பட்டதாக நினைப்பார்கள். ஆனால் நாம் நமது உலக உரிமைகளை, அர்ப்பணம் செய்யும் போது விட்டுவிட்டோம். அதாவது நமது நீதியான அனைத்து பூமிக்குரிய உரிமைகளையும் விட்டுவிட உடன்படிக்கை பண்ணினோம். இதுதான் நமது உடன்படிக்கையின் சாராம்சம்.

கர்த்தருக்கான காரியங்கள் அங்கே ஈடுபட்டிருந்தால் சத்தியத்தின் நன்மைக்காக நாம் செயல்படுவது நமது கடமையாகிறது. ஏனெனில் சத்தியத்திற்கு விரோதமான காரியங்கள் அங்கே தடுக்கப்படும். அப்போஸ்தலர் பலியின் காரியத்தில் நீதிமன்றத்தில் இந்த கொள்கையின் விளக்கத்தை நாம் பார்க்கிறோம். மாயவித்தைக்காரன் எலிமா என்பவனிடம் அரண்மனையில் அப்போஸ்தலர் பவுல் கூறினதாவது: "... பிசாசின் மகனே... கர்த்தருடைய செம்மையான வழிகளை புரட்டுவதில் ஓயமாட்டாயோ? .. சிலகாலம் சூரியனைக் காணாமல் குருடனாயிருப்பாய்." (அப்போஸ்தலர் 13:10,11) இந்த காரியங்களில் கன்னானாகிய அலெக்சந்தர் காரியத்தில் அப்போஸ்தலர் பவுல் சொந்த பழிவாங்குதலை தேடவில்லை என்று நாம் உறுதிப்படுத்துகிறோம்.

இந்த மனபக்குவமே நமது வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் இருக்க வேண்டும். எதிர்க்கிறவர்களுக்கே எதிராக ஏதாவது செய்யப்பட்டால் அது அப்போஸ்தலர் எடுத்த மார்க்கத்தில் காண்பிக்கப்பட்ட அதே ஆவியில் செய்யப்பட வேண்டும். நாம் கிருபையிலும் அறிவிலும் வளர்வதால் நாம் கருணையின் ஆவியில் - மன்னித்தலில் அபிவிருத்தி அடைகிறோம் என்பதை நாம் அனைவரும் காண்கிறோம். அது இருக்க வேண்டிய பிரகாரம் இது இருக்கிறது. தேவனைப் பற்றிய மாபெரும் அறிவு, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பான குணலட்சண அபிவிருத்தி, நம்மை அதிகமான பரோபகாரியாகவும், மன்னிக்கிறவர்களாகவும் ஆக்க வேண்டும்.

## அதிக அநீதிக்கு உண்மையான காரணம் அறியாமை

கர்த்தர் ஒரு தெளிவான சத்திய அறிவைக் கொடுத்து நம்மை ஆசீர்வதிக்கிறார். நாம் சத்திய அறிவுக்குள் வரும்போது அது உலகின் மேல் இலக்க உணர்வைத் தருகிறது. நாம் அனைவரும் விழுந்து போனவர்கள். ஆனால் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்." (1 கொரிந்தியர் 6:11) கழுவப்படாத பரிசுத்தமாக்கப்படாத, நீதிமான்களாக்கப்படாத மற்றவர்கள், சொல்லப்போனால் கசப்பாக பையில் இருக்கிறார்கள்.

உலகில் செய்யப்பட்ட தீமையான செயல்களைப் பார்க்கும் பொழுதும், சரித்திர ஏடுகளை பின்னோக்குப் பார்க்கும் பொழுதும் குற்றம் செய்கிற பெரும்பாலோர் அவர்கள் அப்படி செய்வதற்கான காரணம் காரியங்களில் சம்பந்தப்பட்ட கொள்கைகளை உணர்ந்துகொள்ளாததே ஆகும் என்பதை நாம் காணக்கூடும். பரிசுத்த பேதுரு பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசும் போது, இஸ்ராயேல் ஜீவாதிபதியை அறியாமையினால் கொலை செய்தார்கள் என்று கூறினார். (அப்போஸ்தலர் 3:15,17) பரிசுத்த ஸ்தேவானை கல்லெறிந்து கொள்ளும்படி சனகரின் கட்டளையை கொடுத்த பரிசுத்த பவுல், தான் அறியாமையினாலும் குருட்டுத்தனத்தினாலும் இதை செய்ததாகக் கூறினார். இன்னும் அவர் தேவனுக்கு ஊழியம் செய்ததாக நினைத்ததாக கூறினார்.

கடந்த காலங்களில் நடந்த இவைகள் எல்லாம் உண்மையாயிருக்குமானால் முற்றிலுமான அதே கொள்கையே இப்பொழுதும் நடைமுறையில் தனித்தனியாக இருக்கிறது என்று நாம் நினைக்கக் கூடாதா? கர்த்தர் இந்த காரியங்களை தடுக்கக் கூடியவராக இருக்கிறார். மேலும் ஏற்ற காலத்தில் அதைச் செய்வார். அவர் ஏற்ற காலத்தில் திரையை நீக்கி, வெளிச்சம் பிரகாசிக்கும்படி செய்வார். ஏற்ற காலம் இன்னும் வரவில்லை. சபையானது கிறிஸ்துவின் பாடுகளை இன்னும் நிறைவு செய்யவில்லை.

### பாடுகளின் பாத்திரத்தில் நமது பங்கு

நாம் பானம் பண்ணவேண்டிய பாத்திரத்தை தேவன் ஊற்றினார் என்பதை நாம் உணர்ந்து, கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கு பெறுவதில் களிகூரவும், குறைகூறாத கீழ்ப்படிதலிலும், சாந்தத்திலும் நமது பங்கை பெறவும் வேண்டும். நாம் நமது சத்துருக்களை சிநேகித்து, அவர்களுக்கு தீங்கு செய்ய நினைக்காதிருந்தால், ஆனால் மாறாக, அவர்களது புரிந்து கொள்ளும் கண்களை திறந்து, அவர்களுக்கு நன்மை செய்தால், நாம் சரியான ஆவியை பெற்றிருக்கிறோம். அவர்களுக்கு தீங்கு செய்ய வேண்டும் என்ற விருப்பம் நாம் கர்த்தரின் ஆவி இல்லாதிருக்கிறோம் என்பதை நிரூபிக்கும். கெட்ட ஆவியை பெற்றிருப்பதாக ஒருவர் கண்டால் இன்னும் அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அறிவார். ஆனால் இந்த காரியத்தில் தன்னிடத்தில் கர்த்தரின் ஆவி இருப்பதற்கான ரூபகாரத்தை கண்டால் அவர் களிகூரலாம்.

நம்மை துன்பப்படுத்தி அவதூறாய் பேசி, தீங்கு செய்கிறவர்கள் சீக்கிரத்தில் தாங்கள் வெட்கப்பட்டு போவதை காண்பார்கள். வேத வாக்கியங்கள் கூறுகிறதாவது: “என் நாமத்தினிமித்தம் உங்களை பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர் கர்த்தர் மகிமைப்படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்கு சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார்கள்: அவர்களோ வெட்கப்படுவார்கள்.” (ஏசாயா 66:5) இயேசு வெளிப்படும் போது அவர்கள் பார்த்து அவர்கள் வெட்கப்பட்டுப் போகும் காலமாக அது இருக்கும். “அவர் வெளிப்படும் போது நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம்.” ஆகையால் நமது சத்துருக்களை பழி வாங்குவது எதிர்காலத்தில் இருக்கும். நமது பழிவாங்குதல் என்பது அவர்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும். நமக்கு எதிராக அவர்கள் செய்கிறதற்குத்தக்கதாக அவர்கள் மிகவும் வெட்கப்பட்டு போகத்தக்கதாக நாம் அவர்களுக்கு நன்மை செய்வோம்.

**R5261**

## Moses called to service

## மோசே ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார்

யாத்திரகமம் 3: 1-4

“இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்.” மத்தேயு 5:8

மோசே மனமுடைந்தவனாய் பார்வோனை விட்டு ஓடிப் போனபோது, நாற்பது வயது உடையவனாய் இருந்தார். இஸ்ரயேலருக்கு தலைவராக இருக்க தேவன் அழைத்த போது அவருக்கு வயது எண்பது. அவரது வாழ்க்கையில் முதல் நாற்பது வருடம் சாதாரண கல்விக்காகவும் அடுத்த நாற்பது வருடம் சாந்தத்தின் விசேஷித்த கல்விக்காவும் இருந்தது. தேவன் அவரை ஊழியத்திற்கு பயன்படுத்த விரும்பின போது, மோசே இப்பொழுது ஊழியத்திற்கு தயாராக இருந்தார். எந்த ஒரு தெய்வீக உத்தரவும் அங்கீகாரமும் இல்லாத போது இஸ்ரயேலின் சேனைகளை வழி நடத்த தயாராயிருந்த மோசே, முற்றிலும் அதைரியம் அடைந்தவரானார். ஆனால் தற்போது கர்த்தர் அவரை அழைத்தபொழுது, தன்னம்பிக்கை இல்லாதவராக, தனக்கு தகுதியில்லை, போன்றவைகளைக் கூறி மன்னிப்புக் கேட்டார். அவர் அப்பொழுதுதான் தகுதியுள்ளவரானார் என்பதை அவர் உணரவில்லை.

இன்றைக்கும் கூட தேவனுடைய பிள்ளைகளில் சிலர் இப்படியாக இருக்கிறார்கள். சாந்தம், தாழ்மை, கற்றல் ஆகியவற்றின் பாடத்தின் முக்கியத்துவத்தை உணராதிருக்கிறார்கள். இந்த பாடத்தை கற்றுக் கொள்ளுகிறவர்கள் தேவ ஊழியத்திற்கு மிகவும் முக்கியமான தயாராகுதலைப் பெறுகிறார்கள். “பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.” அதாவது சாந்தம், தாழ்மை மற்றும் கற்பிக்கக் கூடியவர்களுக்கு கிருபை அளிக்கிறார். அப்போஸ்தலர் இந்த கொள்கையில் பலத்தில் சபைக்கு வற்புறுத்து -கிறதாவது: “ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு., அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.” தேவகிருபை உங்களுக்கு கொடுக்கிற வாழ்க்கையின் அனுபவங்களுக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள். நீங்கள் உயர்த்தப்படுவதற்கும் அவர் விரும்புகிற ஊழியத்தை செய்யவும் உங்களை தயார்படுத்துவார். (1பேதுரு 5:6)

மோசே, எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். ஒரு வேளை எகிப்திலிருந்து தன்னுடைய சகோதரர்கள் வெளியேற தூண்டி விடுவதில் தோல்வியடைந்ததற்கு முன்னான நாற்பது வருடங்கள் எப்படி பாண்டித்தியம் உள்ளதாக இருந்தது என்று அவர் எண்ணிக் கொண்டிருந்திருப்பார். இப்பொழுது அவர் அனுபவம் முதிர்ந்த வருடங்களின் வெளிச்சத்தில் இஸ்ரயேலர்களது தலைவராக இருப்பது என்ன மாதிரியான கடினமான வேலை என்பதை கண்டிருக்க கூடும். வனந்தபுர பிரயாணத்தின் கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் அவர் முதிர்ந்த வருடங்களின் அனுபவத்தில் கண்டிருக்கக் கூடும். அவரது ஜனங்கள் கானானை சுதந்தரித்துக் கொள்ள முயற்சிப்பதில் பெறுகிற துன்பங்களையும் நன்றாக புரிந்து கொண்டிருப்பார். அதாவது இவர்களைக் காட்டிலும் போர் முதலானவைகளில் அதிக அனுபவமுள்ள கானானியர்களின் எதிர்ப்பை எப்படி சந்திப்பது போன்றவைகளையும் அறிந்து கொண்டிருப்பார். மனித நோக்கங்களின் முட்டாள்தனத்தை அவர் தத்துவப்படுத்தி, இஸ்ரயேல் ஜனங்கள் விடுதலையாக்கப்பட தயாரற்ற நிலையில் இருப்பதால் அவர்களை அடிமைத்தனத்தில் விட்டுவிடுவதே ஞானமானது என்று முடிவு பண்ணியிருந்தார்.

### முட்செடி எரிந்தும் வெந்து போகவில்லை

மோசேயின் ஆட்டு மந்தை மலைகளில் மேய்ந்துக் கொண்டிருந்த போது ஒரு அசாதரணமான வெளிச்சத்தைக் கண்டார். ஒரு முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும் அது வெந்து போகாமல் இருந்தது. அது என்னவென்று பார்க்கும்வரை மிகவும் ஆச்சயரிப்பட்டார். அவர் அந்த முட்செடியை நெருங்கினார். அங்கேயிருந்து ஒரு சத்தம் வந்தது. அது தேவனுடைய பிரசன்னத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்தியது. சேனைகளின் கர்த்தர் அங்கே பிரசன்னமாகியிருந்ததால், அது பரிசுத்த பூமி, ஆகையால் மோசேயின் பாதரட்சையை கழட்டும்படி கொடுக்கப்பட்ட கட்டளைக்கு கீழ்ப்படிந்தார். மோசே தெய்வீக செய்தியை கேட்ட போது தேவனை நோக்கி பார்க்க பயந்ததினால் தனது முகத்தை மூடிக் கொண்டார்.

இஸ்ரயேலர்கள் மற்றும் மோசேயின் நம்பிக்கைகளின் அடித்தளம் மோசேயின் மனதில் தேவனுடைய செய்தியால் சித்தரிக்கப்பட்டது. தேவன் பேசியதாவது: "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்." இந்த அறிவிப்பு மோசேயின் அனுபவம் குறிப்பிட்டதை தெளிவாக புரிந்து கொள்ளும்படி செய்து. இதன் மூலம் தேவன் ஒரு நித்திய உடன்படிக்கையாக ஆபிரகாமிடம் செய்து, பின்பு ஈசாக்கு மற்றும் யாக்கோபுடன் உறுதி செய்யப்பட்ட விசேஷித்த உடன்படிக்கையை நினைவுபடுத்தினார். தேவன் தாம் செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணின நல்ல காரியங்களை தேவன் மறக்கவில்லை என்பதை இது மோசேக்கு உறுதிபடுத்தியது, இதனால் மோசேயின் விசுவாசமும் நம்பிக்கையும் மீண்டும் நிறுவப்பட்டது. இஸ்ரயேலர்கள் விடுதலையடைந்து பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய மிகவும் செழிப்பான தேசமும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதுமான கானான் தேசத்தை அடைய தேவனுடைய ஏற்ற காலம் வந்தது என்பதை மோசே அறிந்து கொண்டார்.

அந்த நாற்பது வருடங்களில், ஒரு வேளை அதற்கு முன்னதாகவே மோசேக்கு நேரம் இருந்தது. தேவன் இஸ்ரயேலர்கள் மேல் உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்தரா என்றும், அவர்கள் எகிப்தியர்களால் ஏன் ஒடுக்கப்பட அனுமதித்தார் என்றும் மோசே ஆச்சரியப்பட்டார். தேவனுடைய உறுதிமொழியால் அவர் அவர்கள் மேல் அக்கறை கொண்டிருந்தார் என்பதையும் சில நல்ல காரணங்களுக்காக அவர் இந்த வருடங்கள் முழுவதும் காத்துக் கொண்டிருந்தார் என்பதையும் தேவன் அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவராக இருந்தும் அதை ஒரு நோக்கத்துடன் செய்யாதிருந்தார் என்பதையும் புரிந்து கொண்டார். அடிமைகளான இஸ்ரயேலர்களை விடுவிக்கும்படி இப்பொழுது தேவனுடைய ஊழியனாக, தூதராக, வாயாக இருந்து பார்வோனிடம் போகும்படி மோசேக்கு அழைப்புக் கொடுத்தார்.

## நான் உன்னோடே இருப்பேன்

நாற்பது வருடத்திற்கு முன்பு முழு நம்பிக்கையும் தைரியமும் உடையராயிருந்து இஸ்ரயேலர்களை தலைமை தாங்கி வழி நடத்த தயாராயிருந்த மோசே, இப்பொழுது சுய நம்பிக்கையை இழந்தவராக தேவனிடம் அளித்த பதிலாவது: "பார்வோனிடத்துக்கும் போகவும், இஸ்ரயேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும், நான் எம்மாத்திரம்?" அதாவது, கர்த்தாவே, நான் வெற்றி அடையாதவன் என்பதை நீர் அறிவீர். எல்லா கல்வியையும் கற்றிருந்தாலும் ஆடு மேய்ப்பதைத் தவிர வேறு ஒன்றுக்கும் நான் தகுதியில்லாதவன். கர்த்தாவே இஸ்ரயேலை தலைமை தாங்கி வழி நடத்த என்னைக் காட்டிலும் திறமையுள்ளவர்கள் இருப்பார்கள். அது மாத்திரமல்ல, என்னுடைய ஜனங்கள் எகிப்தை விட்டு வரமாட்டார்கள் என்று நான் பயப்படுகிறேன் என்று கூறினார்.

தேவனுடைய பதிலாவது: "நிச்சயமாக நான் உன்னோடே இருப்பேன்." இதை நீயே பண்ண வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இது மாபெரும் வேலை என்பதையும் ஒரு வல்லமையான வேலை என்பதையும் நான் அறிவேன். ஆனால், "நான் உன்னோடே இருப்பேன்." காரியத்தை ஆற்றல் வாய்ந்ததாக செய்து கர்த்தர் மோசே ஜனங்களை வழி நடத்துவது மாத்திரமல்ல அவர்கள் "தேவனுடைய பர்வதமாகிய" இந்த பர்வதத்தத்திற்கு வந்து ஆராதனை செய்வார்கள் என்று அறிவித்தார்.

மோசே, தனது முந்தைய தோல்வியை நினைத்து மிகவும் ஜாக்கிரதையாக இருந்தார். இஸ்ரயேலர்களிடம் நான் சென்று தேவன் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொன்னால், அவர்கள் யார்? எந்த தேவன்? அவரது நாமம் என்ன? என்று கேட்டால் நான் என்ன சொல்வது என்று தேவனிடம் கேட்டார். அதற்கு தேவன், "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்று கூறினார். அதாவது என்றென்றைக்கும் தாமே இருப்பவர்! மோசே. இந்த மாபெரும் வேலையை புரிந்துகொள்ள நினைக்கக்கூட இயலாதபடி தன்மேல் அவநம்பிக்கை உடையவராய் இருந்தவர், எகிப்தியர்கள் ஜனங்களை போகவிடமாட்டார்கள் என்று வலியுறுத்தினார். அவர்களது நோக்கமெல்லாம் இஸ்ரயேலர்களை அடிமைகளாக வைத்திருப்பதே என்ற அவர் அதிகமதிகமாக நம்பிக்கைக் கொண்டார். இன்னொரு ஆட்சேபனை என்னவென்றால் தேவன் மோசேயிடம் தரிசனமானார் என்பதை இஸ்ரயேலர்களே நம்பமாட்டார்கள் என்பது,

இந்த ஆட்சேபனைகளுக்கு பதிலாக, மோசே சர்வ வல்லவரிடம் பேசினார் என்பதற்கும் தேவன் சில அடையாளங்களை கொடுத்து இதோ, அடையாளங்கள் இஸ்ரயேலர்களையும் எகிப்தியர்களையும் கூட நம்பச் செய்யும் என்று உறுதியளித்தார்.

## மந்த நாவும் திறமையின்மையும்

மோசே மிகுந்த சாந்தகுணமுள்ளவராயிருந்து கர்த்தரையும் அவரது வல்லமையும் முழுவதும் நம்பினாலும், தேவனுடைய உதவியுடன் கூட அவரால் ஜெயம் கொள்ள முடியும் என்று உணர முடியவில்லை. இந்த வேலை அவ்வளவு முக்கியமானதால் தேவன் வேறு யாரையாவது தெரிந்து கொள்ளட்டும் என்பது மோசேயின் எண்ணம். மோசே கூறியதாவது: "நான் வாக்கு வல்லவன் அல்ல: நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன்." அதுவுமல்லாமல் அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகவோ, ஊழியனாகவோ அனுபவம் இல்லாதவன் என்று கூறினார். தேவன் இந்த வேலையை எடுத்துக் கொள்ள தன்னை சும்மா சொல்லி பார்க்கிறாரா ஆனால், வேறு யாரையாவது தெரிந்துகொள்ள எண்ணங்கொண்டிருக் –கிறாரா ஆனால் இல்லை! கர்த்தரின் பதிலாவது: "நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்." (யாத்திராகமம் 4:1,12)

ஆகையால் இன்றைக்கு சுவிசேஷ யுகத்தின் கர்த்தருடைய உண்மையான பிள்ளைகள், தேவனுடைய நாமத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியர்களாயிருந்து, அனைவரும் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, அன்பினால் சத்தியத்தை பேசவும், தேவனுடைய தகுதியான சேனாபதியாகவும் தகுதியுள்ளவர்களாகவும் அங்கீகரிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். மகா கனம் பொருந்திய தேவன், அவரது செய்தியை உலகத்திற்கும் சபையில் சகோதரர்களுக்கும் அவரது பேசும் கருவியாக, முகவராக இருக்க நம்மை அழைக்க எப்படி தீர்மானித்தார் என்பதை நம்மில் சிலர் சில சமயங்களில் உணர முடியாதவர்களாக காணப்படுகிறார்கள். தேவன் நம்மோடிருக்கிறார் என்று நம்பிக்கை வந்த போது அவர்கள் காரியங்களை மிகவும் கண்மூடித்தனமாகவும் வேண்டுமென்றே செய்யக்கூடிய ஆபத்தில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உற்சாகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாதிருக்கும் போது, மோசேயைப் போன்று ஊக்கமுட்டப்பட வேண்டியவர்கள் எந்த விதத்திலும் தேவனுடைய ஊழியத்தில் இணைந்துள்ள பெரும் மதிப்பினால் காயப்படுவதில் குறைவான ஆபத்தில் இருக்கிறார்கள். பழங்கால மோசேயைப் போன்று தற்காலத்தில்

தாழ்மையுள்ளவர்களை நோக்கி தேவன் கூறுகிறதாவது: "நான் உன்னோடே இருப்பேன். நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்." இதில் ஒரு பாடம் என்னவென்றால் நமது பலத்திலோ நமது சொந்த தீர்மானத்திலோ சுய நம்பிக்கை இல்லாதிருத்தல்; இன்னொரு முக்கிய பாடம் என்னவென்றால், நாம் தேவனிடத்தில் அனைத்து நம்பிக்கையையும் முழு நம்பிக்கையையும் வைக்க வேண்டும், இந்த பாடத்தைக் கற்றுக்கொள்ளும் வரை யாராவது தேவனுடைய பேசும் கருவியாக இருப்பதற்கு உண்மையிலேயே தகுதியானவர்களாக இருப்பார்களா? மோசேயின் விஷயத்தில் சாந்தம், சுய நம்பிக்கையின்மை, தாழ்மை ஆகியவை அவரது நாற்பது வருட பயிற்சியில் அதிகமாக உச்சரிக்கப்பட்டு வந்தாலும் அவர் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தால், வேறொருவர் பேசுகிறவராக இருக்க வேண்டும் என்று கர்த்தரிடம் மன்றாடினார். தேவன் அவரது வேண்டுதலைக் கேட்டு அவரது சகோதரன் ஆரோனை அவருடன் இருந்து வாயாக பேசும்படியாகவும், பார்வோனிடம் சென்று கர்த்தருடைய நாமத்தில் கோரிக்கைகளை வைக்கும்படியாகவும் அனுமதியளித்தார்.

எனினும் இந்த மாபெரும் வேலைக்கு ஆரோன் திறமையான நபர் அல்ல. மோசே பெற்ற கல்வியை ஆரோன் பெறவில்லை. ஆகையால் தேவன் மோசேயை அவரது சகோதரன் ஆரோனுக்கு ஒரு தேவனாக, ஆளுனராகவும், ஆரோனை மோசேக்கு ஊழியனாக, வாயாக இருக்கும்படியும் சாந்த குணமுள்ள தாழ்மையான மோசே சொல்வதையே பேச வேண்டும் என்றும் கட்டளையிட்டார். ஏனெனில் அவரது சாந்த குணத்தினால் இந்த பொறுப்பை தேவன் மோசேயிடம் கொடுத்தார்.

கர்த்தருடைய ஊழியம் அது முக்கியமானதாக அல்லது விசேஷித்த வேலையாக இருந்தாலும், அதற்கு பயன்படுத்தப்படுகிற அனைத்து கர்த்தருடைய ஜனங்களுக்கும் தாழ்மை என்பது மிகவும் முக்கியமான குணலட்சணமாக வேத வாக்கியங்கள் எல்லா இடங்களிலும் குறிப்பிடுகின்றது. கர்த்தருடைய பிள்ளைகள் இதை தங்கள் ஞாபகத்தில் தொடர்ந்து வைத்து, விடாப்பிடியாக தங்கள் மார்க்கத்தை உருவேற்படுத்தினால் அதற்கேற்றாற்போல் தேவன் அவர்களை பயன்படுத்துவார் என்று நாம் உறுதியாக கூறலாம். கர்த்தருக்கான எந்த ஊழியமும் கனத்துக்குரியது. ஆனால் நாம் எந்த அளவுக்கு பயன்படுத்தப்படுகிறோமோ அந்த அளவுக்கு தற்கால வாழ்வில் ஆசீர்வாதமும், வருங்கால வாழ்வில் பெரிதான பரிசும் இருக்கும். ஆகையால் அப்போஸ்தலர் கூறுவது போல தேவன் நம்மை ஏற்ற காலத்தில் உயர்த்தும்படி அவரது பலத்த கைக்குள் அடங்கியிருப்போமாக.

**R5263**

## Men of Destiny
## விதிவிலக்கான மனிதர்கள்

யாத்திராகமம் 5:1-14

"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடைவார்கள்."- மத்தேயு 5:4

நெப்போலியன் விதி விலக்கான மனிதனாக பேசப்பட்டான். அவனது அனுபவங்களோடு இணைந்த அநேக காரியங்கள் தேவன் அருளால் அவனிடம் செய்யப்பட வேண்டியிருந்தது. இது அவன் தேவனுடைய ஊழியக்காரன் என்று குறிக்காது. அவன் வெகு தூரம்! தெய்வீக ஞானம் எல்லா சமயங்களிலும் அவருக்கு ஊழியம் செய்ய மனித கோபத்தை ஒதுக்கித் தள்ளும் என்று இது குறிக்காது. சகலமும் தெய்வீக நோக்கத்திற்கு ஏதுவாக நடைபெறுவதற்கு இவ்வாறு கட்டுப்படுத்தப்படும். நெப்போலியனின் நாட்களில் தெய்வீக நோக்கங்கள் என்ன என்பது அப்பொழுது வாழ்ந்த தேவனுடைய பிள்ளைகளுக்கு கூட தெளிவில்லாமல் இருந்தது. உண்மையிலேயே அந்த நோக்கத்தை இன்னும் தேவனுடைய பிள்ளைகளால் ஓரளவுக்கு மட்டுமே புரிந்து கொள்ள முடிகிறது என்று நாம் கூறலாம். கடந்த நூற்றாண்டில் உலக முன்னேற்றத்தில் நெப்போலியனின் அரசியல் காரியங்கள் பல வழிகளில் கிரியை நடப்பித்ததை வேத மாணவர்கள் தங்கள் விசுவாசக் கண்கள் மூலம் காணக்கூடும். என்னுடைய நோக்கங்கள் எல்லாம் நிறைவேறும் என்று விசுவாச காதுகளுக்கு தேவன் அறிவிக்கிறார். "என் வாயிலிருந்து புறப்படும் வசனம் வெறுமையாய் என்னிடத்தில் திரும்பாமல், அது நான் விரும்புகிறதை செய்து, நான் அதை அனுப்பின காரியமாக வாய்க்கும்." (ஏசாயா 55:11)

தேவன், இஸ்ரயேலர்களை எகிப்திலிருந்து விடுவிக்கும் சமயத்தில் எகிப்தை ஆளுகை செய்த பார்வோன் கூட ஒரு விதி விலக்கான மனிதன் தான். நெப்போலியனைக் காட்டிலும் இந்த பார்வேனை நாம் உறுதியாக கூறலாம். ஏனெனில் இந்த உண்மைக்கு தெய்வீக உறுதிமொழி இருக்கிறது. என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும் படியாகவும் என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலை நிறுத்தினேன். (யாத்திராகமம் 9:16) இஸ்ரயேல் ஜனங்களை போக விடாதபடிக்கு பார்வோனின் மனதை தேவன் கடினப்படுத்தினார் என்று பரிசுத்த பவுல் அறிவித்தார். அவர் குறிப்பிடுவதாவது: மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும் படியாகவும் என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும் -படியாகவும் உன்னை நிலை நிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. (ரோமர் 9:17)

ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் கடந்த காலத்தில் இந்த வசனத்தை மிகவும் தவறாக புரிந்து கொண்டிருந்தார்கள். தேவன் பார்வோனை துஷ்டனாகவும் கடின மனதுடையவனாகவும் படைத்திருந்தார் என்றும் அதனிமித்தமே அவன் தன் மனதை அதிகமதிகமாக கடினப்படுத்தினான் என்றும் அவர்கள் அர்த்தம் கூறினார்கள். ஆனால் அப்படியில்லை! தேவனுடைய கிரியைகள் அனைத்தும் பூரணமாயிருக்கிறது என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. அவர் ஒரு அபூரண மனிதனை படைக்கவேயில்லை. ஆதாம் அவனது சிருஷ்டிகரின் சாயலில் அவரது நீதிக்கடுத்த ரூபத்திலும் படைக்கப்பட்டான். பாவம் தான் அழிவை ஏற்படுத்தியிருக்கிறது. அது சுய நலத்தையும் கடின மனதையும் உண்டாக்கியிருக்கிறது.

### அடுத்த பக்கம் நோக்குதல்

இந்த சீரழிவு பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்கு வழிவழியாக வந்திருக்கிறது. பார்வோனும் இயற்கையாகவே அவனது முற்பிதாக்கள் மூலமாக இப்படியாக உருவாக்கப்பட்டிருந்தான். அவன் தன் சுயசித்தத்தின்படி செயலாற்றினான். பரிசுத்த யாக்கோபு அறிவிக்கிறதாவது: "தேவன் ஒருவனையும் சோதிக்கிறவரல்ல." (யாக்கோபு 1:13) எந்த மனிதனுடைய மனதையும் கடினப்படுத்த தேவன் தமது வல்லமையுள்ள சக்தியை பயன்படுத்தினதேயில்லை என்பதை காட்டிலும்

உறுதியானது வேறு எதுவும் இல்லை. மாறாக, தேவனுடைய அருள், ஆசீர்வாதங்கள். அறிவுறுத்தல்கள் மற்றும் இரக்கங்கள் அனைத்தும் கல்லான இருதயத்தை நீக்கி மிருதுவான இருதயத்தை கொடுக்கவேயாகும்.

தேவன் பிடிவாத குணமுள்ள ராஜாவை எகிப்திய ராஜாக்களிலிருந்து எழும்பப் பண்ணினார் என்றும் ஒவ்வொரு வாதையையும் நீக்கின தேவனுடைய இரக்கங்களே பார்வோனின் மனதை கடினப்படுத்தினது என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார் என்பதை வேத மாணவர்கள் இப்போது உணருகிறார்கள். தேவனுடைய இளகிய மனதையும் தயவையும் மன்னிப்பையும் பற்றிய ஒரு மாபெரும் பாடத்தை கற்பிக்கவும மனுக்குலத்தை ஆசீர்வாதிக்கிற தேவனுடைய பெருந்தன்மையான கொள்கையை விளக்கவுமே தேவன் இந்த இராஜாவை அரியணைக்கு எழும்பப்பண்ணினார். தமது சுய சித்தமாக இதைச் செய்தார். சாத்தானின் வக்கிரத்தினால் பார்வோன் தீங்கானவைகளை செய்தான்.

விதிவிலக்கான மனிதர்கள் அனைவருமே தேவனுக்கு விரோதமானவர்கள் அல்ல. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மோசே, தாவீது, சாலமோன் மற்றும் தீர்க்கதரிசிகள், இயேசு அவரது அப்போஸ்தலர்கள், அவரது சீஷர்கள், அனைவரும் விதிவிலக்கான மனிதர்கள் முன்னறியப் -பட்டவர்கள். தேவனால் அழைக்கப்பட்டவர்கள் இந்த விதி விலக்கான மனிதர்களுடன் கூடாத தேவன் சமமாகவும் அதே போல கிரியை நடப்பிக்கிறார். இவர்கள் மேல் அவரது இரக்கங்கள் பரிவு மற்றும் கிருபையான வாக்குத்தத்தங்கள், மேன்மைத் தன்மையையும், மென்மையான இருதயத்தையும், மன்னிப்பையும், அன்பையும், பரிசுத்த ஆவியின் "கிருபைகளாகிய சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர அன்பு, அன்பு" ஆகிய குணலட்சணம் உடையவர்களாக ஆக்குகிறது.

இந்த மனிதர்களுடைய விதி தற்கால வாழ்க்கையில் கொஞ்சம் மட்டுமே கிரியை நடப்பிக்கிறது. தேவனோடு அவர்களது ஐக்கியத்தை பராமரிப்பதாலும் அவரது வாக்குத்தத்தங்களை உரிமையாக்கி கொண்டதாலும் அதற்கு நல்ல விலை கொடுக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இதனிமித்தம் அவர்கள் உலகத்துடனான நட்பை இழக்கிறார்கள். மனிதர்களால் மிகவும் உயர்ந்ததாக கருதப்படுகிற காரியங்களை அடிக்கடி இழக்கிறார்கள். ஆனால் அது "எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை" அவர்களுக்கு கொண்டு வரும். தெய்வீக கிருபையின் வளங்களாகிய இந்த சமாதானம், சந்தோஷம் மற்றும் ஆறுதல் ஆகியவைகள் இப்போது மூன்று சிக்கக் கூடியதாக மட்டுமே இருக்கிறது. இவைகளை இவர்களுக்காக மேசியாவின் ராஜ்யத்தில் ஒதுக்கி வைத்திருக்கிறார்.

இரட்சகர் பாவத்திற்கான தமது பலியை கொடுப்பதற்கு முன்னர் இந்த பரிசுத்தவான்கள் வாழ்ந்ததால் மற்ற மனுக்குலத்தாரைக் காட்டிலும் இவர்கள் ஒரு மேலான உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள். மேலும் மேசியாவின் ராஜ்யத்தில் மானிட பிரதிநிதிகளாக ஒரு ஆயிர வருடங்கள் பூமியெங்கும் பிரபுக்களாக இருப்பார்கள். நமது ஆண்டவரின் முதலாம் வருகையிலிருந்து வாழ்ந்த இந்த விதி விலக்கான மனிதர்கள் இன்னும் மேலான பரிசை சுபாவ மாறுதலை பெறுவார்கள். அவர்களது இரட்சிப்பின் அதிபதி, இரட்சகர், தூதர்களுக்கும் துரைத்தனத்திற்கும் வல்லமைக்கும் மேலாக உயர்த்தப்படுதல் மற்றும் தேவனுடைய வலது பாரிசமாகிய அவரது விதிப்பலனை முன்னரே அடைந்திருக்கிறார். (பிலிப்பியர் 2:9; எபேசியர் 1:120,21)

நெருக்கமான வழியில் அவரது அடிச்சுவடுகளை பின்பற்றி தெய்வீக வாக்குத்தத்தின் கனம், மகிமை, சாகாமையையும் மேசியாவின் ராஜ்யத்தில் உடன் சுதந்தரத்தையும் தேடுகிற விசுவாச கூட்டதார் கூட விதி விலக்கான மனிதர்கள் தான். ஆனால் அவர்கள் இன்னும் அவர்கள் விதிப்பலனை அடையவில்லை. முழு எண்ணிக்கையிலான தெரிந்துக்கொள்ளப்பட்ட சபையானது அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு, உண்மைத் தன்மையை நிரூபிக்கும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பிறகு முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாறுதலின் மூலம் அவர்களது விதிப்பலனை அடைவார்கள், ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது." அவர்களது மாறுதல் மூலமாக அவர்கள் தங்களது ஆண்டவரைப் போல தெய்வீக சுபாவத்தில் பூரணமாக்கப்படுவார்கள். (2 பேதுரு 1:4) ஓ, மகிமையான விதிப்பலன்! பரலோக தளத்தில் அவர்களது கர்த்தரோடு இணைக்கப்பட்டு அல்லது கலியாணம் பண்ணப்பட்டு அவர்கள் அவருடைய உடன்சுதந்தரராகவும் ஒரு ராஜரீக ஆசாரிய கூட்டமாகவும் இருந்து மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்காக உலகத்தை அரசாளுவார்கள். இந்த மனுக்குலத்தின் மீட்புக்காகவே கிறிஸ்து மரித்தார். (வெளிப்படுத்தல் 20:6)

பரிசுத்த பவுல் கூறுவது போல, முடிவாக சிலுவைக்கு முன்னரும் சிலுவைக்கு பின்பும் விசுவாசமாயிருந்தவர்கள் ராஜ்யத்தில் இணைக்கப்படுவார்கள். பழங்கால பாத்திராவன்கள் நிரூபித்தாலும் சபையானது இன்னும் மேலான விதிப்பலனாகிய அதன் மகிமையை அடைவதற்கு முன்னதாக பூரணமடைய முடியாது. (எபிரேயர் 11:38-40)

## "நான் கர்த்தரை அறியேன்"

ஏற்ற நேரத்தில் மோசே தனக்கு வாயாக இருந்த ஆரோனுடன் பார்வோனிடம் சென்று இஸ்ரயேலர்களை விடுவிக்கக்கூடிய தெய்வீக செய்தியை அறிவித்தார். அதற்கு பார்வோன் ஏளனமாக அறிவித்ததாவது: "நான் கர்த்தரை அறியேன். நான் இஸ்ரயேலை போக விடுவதில்லை." கொஞ்ச காலத்திற்கு முழு வேலையும் தோல்வியாக காணப்பட்டது. அது மோசேக்கு ஆரோனுக்கு மாத்திரமல்ல சகல இஸ்ரயேலருக்கும் விசுவாசத்திற்கான ஒரு சோதனை காலமாக இருந்தது. பார்வோன் மனக்கடினத்துடன் இஸ்ரயேலரின் வேலைப்பளுவை அதிகப்படுத்தும்படி கட்டளை கொடுத்தான். பொது கட்டடங்களுக்காக செங்கல் செய்யும்படி கட்டளையிடப்பட்டார்கள். சுடப்படாத களிமண் மற்றும் வைக்கோலுடன் செங்கல் செய்யப்பட்டன. வைக்கோல் மண்ணை இணைப்பதற்காக பயன்படுத்தப்பட்டன. புதிய கட்டளையின்படி அதே எண்ணிக்கையிலான செங்கல்லை செய்ய வெண்டும், வைக்கோலை அவர்களே தேடிக் கொள்ள வேண்டும். இப்படியாக அவர்கள் வேலைப்பளு இரட்டிப்பாக்கப்பட்டது. சரியான எண்ணிக்கையில் செங்கல் செய்யவில்லை என்றால் அடிக்கப்பட்டார்கள். அவர்கள் வேலைப்பளு அதிகரித்ததால் மோசே மற்றும் ஆரோனை குறை கூறி முணுமுணுத்ததில் நாம் ஆச்சரிப்பட முடியுமா! எனினும் இந்த கசப்பான அனுபவங்களினால் ஜனங்கள் அனைவரும் தேவ கிருபையினால் வழங்கப்படும் விடுதலையை வரவேற்க அதிகமாக தயாராக இருந்தார்கள்.

நமது ஆவிக்குரிய சில விடுதலைகளிலும் இது உண்மையில்லையா? ஓரளவுக்கு, ஆரம்பத்தில் நாம் தேவனுக்கு கீழ்ப்படியவும் அவரை சந்தோஷப்படுத்தவும் முயற்சிக்கும் போது சத்துருவானவனிடமிருந்து அதிக எதிர்ப்புகளும் அதிகமான மாம்சீக சோனைகளும் வரும். கர்த்தர் நமது விசுவாசத்தைப் பலப்படுத்துவார். பாவம்

மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து விடுவித்ததற்காகவும் அவரது குடும்பத்தில் நம்மை சேர்த்துக் கொண்டதற்காகவும் நம்மை பாராட்டும்படி செய்வார்.

இஸ்ரயேலரின் இந்த இன்னல்களைப் பற்றிய பதிவு 1884ல் பிரெஞ்ச் அறிஞர் நேவில் என்பவரால் உறுதிப்பண்ணப்பட்டது. அவர்கள் இஸ்ரலேயர்கள் கட்டின பித்தோம் என்ற பட்டணத்தை கண்டுபிடித்தார். (யாத்திராமம் 1:11) அவர்கள் செய்த செங்கற்களில் சில லண்டனில் பிரிட்டிஷ் அருங்காட்சியத்திலும் நியூயார்க்கில் உள்ள அருங்காட்சியத்திலும் வைக்கப்பட்டுள்ளன. அவை நான்கு அங்குலத்திலிருந்து எட்டு அங்குலம் வரை சதுரத்திலும் இரண்டு அங்குலம் கனத்திலும் வேக வைக்கப்படாமல் ஆனால் மிகக் கடினமாக இருக்கின்றன. இன்னொரு பிரயாணி பித்தோம் பட்டனத்தின் சுவரை விளக்கிக் கூறுகிறதாவது: "அந்த சுவற்றின் கீழ்பகுதி கொஞ்சம் உயரம் வரை வைக்கோல் கலந்து செய்யப்பட்ட நல்ல தரமான செங்கற்களால் கட்டப்பட்டிருந்தது. மேலே உள்ள பகுதி அந்த அளவுக்கு நல்ல தரமானது அல்ல. கடைசி பகுதியில் வைக்கோலே இல்லை, ஆனால் அதில் கோரைகள், நீர் தாவரம், நாணல் ஆகியவை களிமண்ணோடு கலந்து செய்யப்பட்டிருந்தது.

### கானானுக்கான முன்னேற்பாடுகள்

யாத்திரகாகமம் 1:14 இன் கூற்று பொதுவாக இஸ்ரயேலர்கள் பலவிதமான வேலைகள் மற்றும் வர்த்தகத்தை கற்றுக் கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டார்கள் என்று புரிந்து கொள்ளப்படுகிறது. அவர்கள் ஆபிரகாமின் காலத்திலிருந்தே மேய்ப்பராக இருந்தவர்கள். அந்த காலத்தில் இருந்த உயர்ந்த தொழில் துறை பள்ளியில் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அது ஒரு தீவிரமான பயிற்சி, ஆனால் அவசியமான ஒன்று, அவர்கள் முன்னே வைக்கப்பட்டிருந்தது. இதெல்லாம் ஒரு சந்தர்ப்பவசமாக இருந்தது என்று சொல்ல முடியுமா? கர்த்தர் அவரது கிருபையில் அவர்களுடன் தொடர்பு கொண்டு அவர் கொடுக்க இருக்கிற அநேக சந்தர்ப்பங்களுக்கு தகுதிபடுத்துகிறார்." கீழ்ப்படியப்பண்ணுகிறார் என்று நாம் சொல்லக்கூடாதா?

பழங்கால நிழலான இஸ்ரயேலரோடு சம்பந்தப்பட்ட கர்த்தருடைய வழி நடத்துதல், ஆவிக்குரிய இஸ்ரயேலன் ஒருவனுக்கு கிடைக்கும் என்பதை கவனித்து பாராட்ட முழுவதும் தயாராக இருக்க வேண்டும் என்பது பகுத்துணரக்கூடும். எனினும் சில பாடங்கள் கற்றுக்கொள்ள இதைக் காட்டிலும் கடினமாக இருக்கும். தேவன் தம்முடையவர்களாக இருக்கிறவர்கள் அனைவரின் காரியங்களையும் மேற்பார்வை இடுகிறார், தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைந்து அந்த உறவை பாராமரிப்பவர்கள் மட்டுமே பரிசுத்த பவுலின் ஆறுதலான வார்த்தைகள் பொருந்தும் என்பதை ஞாபகத்தில் வைப்பது நல்லது. "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களை தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்." (ரோமர் 8:28) ஏமாற்றம், சோதனைகள், விரக்தி, எதிர்ப்புகள் முதலானவை நீதியின் சமாதான கனிகள் நம்மில் கிரியை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. இப்படியாக அது "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது." (2கொரிந்தியர் 4:17)

**R5264**

## Some Interesting Questions
## ஆவலைத் துண்டும் சில கேள்விகள்

ஆதாமிய மரணமா? அல்லது பலியின் மரணமா?

கேள்வி : ஒரு வேளை தேவனுடைய அர்ப்பணம் செய்த பரிசுத்தவான்களில் ஒருவர் வெள்ளம், தீ முதலான இயற்கை சீற்றத்தால் மரித்தால் அது பலியின் மரணமா அல்லது ஆதாமிய மரணமா?

பதில் : அர்ப்பணம் செய்த ஒரு தேவனுடைய பிள்ளை ஆதாமிய மரணத்தை பெற முடியாது. அவரது மரணம் பலியின் மரணமாகவோ அல்லது இரண்டாம் மரணமாகவோ இருக்கும். அர்ப்பணம் செய்த ஒரு தேவனுடைய பிள்ளை மரித்தால் அந்த மரணம் அது அவர் முன்னரே செய்திருந்த அர்ப்பணத்தின் வெறும் நிறைவேறுதலாகும். நமது ஜீவன் மகா பிரதான ஆசாரியரால் பரிசுத்தமும் பிரியமுமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் தேவனுடன் அர்ப்பணம் செய்த இந்த பிள்ளை அவரை விட்டு விலகினால் அது இரண்டாம் மரணமாகும். அவர் வேண்டுமென்றே, தெரிந்தே பாவம் செய்தல் அவர் மரணத்திற்கு ஏதுவான பாவத்தை செய்கிறார். (1 யோவான் 5:16)

### நமது கர்த்தரின் ஞானஸ்நானம்

கேள்வி : நமது கர்த்தர் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னரே தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றாரா?

பதில் : நமது ஆண்டவரின் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு பிறகே இயேசுவின் மேல் பரிசுத்த ஆவி இறங்கியதை தேவன் வெளியரங்கமாக்கினார் என்று நமது கர்த்தரின் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றதைப் பற்றிய வேதாகம பதிவு குறிப்பிடுவதாக தெரிகிறது. தண்ணீரில் அவர் முழுகுவதற்கு முன்னரே மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தை பெற்றார்; அதாவது அவரது சொந்த சித்தத்தை விட்டு விட்டார்; அதாவது பழைய ஏற்பாட்டிலிருந்து அப்போஸ்தலர் மேற்கொள் காட்டுவது போல "நான் இதோ வருகிறேன் புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது. என் தேவனே, உமக்கு பிரியமானதை செய்ய விரும்புகிறேன்." (சங்கீதம் 40:7,8; எபிரேயர் 10:7) நமது கர்த்தர் புத்தகத்தில் அவரைக் குறித்து எழுதியிருக்கிற அனைத்தையும் செய்யவே அவர் வந்தார்.

நமது கர்த்தர் அவது சித்தத்திற்கு முன்னரே மரித்தவராக இருந்தார். இல்லையென்றால் அவர் யோர்தானில் யோவானிடத்திற்கு சென்றிருக்க மாட்டார். இயேசுவின் பலியை தேவன் ஏற்றுக்கொண்டதை வெளியரங்கமாக்குவதற்கு இயேசு அடையாளத்தை நிறைவேற்றும் வரை தேவன் காத்திருந்தார். ஆகையால் அவர் தண்ணீரிலிருந்து மேலே வந்த பிறகு பரிசுத்த ஆவி ஒரு புறாவைப் போல இறங்கியது என்று நாம் வாசிக்கிறோம். வேத வாக்கியங்கள் அறிவிக்கிறதை போல "கண்டு சாட்சி கொடுத்த" யோவானைத் தவிர வேறு யாருக்கும் அந்த வெளியரங்கமான அடையாளத்தை கொடுக்கவில்லை.

### குணலட்சண அபிவிருத்தி

கேள்வி : திரைக்கு மறுபுறத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் ஒருவராக இருப்போம் என்கிற நல்ல நம்பிக்கையை பெறுவதற்கு நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் குணலட்சண சாயலை திரைக்கு

இந்த பக்கம் ஒருவர் பெறுவதற்கு எவ்வளவு அருகாமையில் இருக்கிறார்?

பதில் : அபூரணமான எதையும் யேகோவா தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். நமது மாம்சீக சுபாவம் பிரதான ஆசாரியரால் ஒப்புக்கொடுக்கப்பட்டால் கூட, முதலாவது ஆசாரியரின் புண்ணியத்தினால் மூடப்பட வேண்டியதாயிருக்கிறது. இப்படியாக தெய்வீக ஏற்புக்கு முன்பாக பூரணப்பட வேண்டியதாயிருக்கிறது. நம்மை நாமே நினைத்து பார்க்கும் போது புது சிருஷ்டியை மண்பாண்டத்தில் நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். புது சிருஷ்டியானது கிறிஸ்துவின் சாயலை பெற்றிருக்க வேண்டும்.

மாம்சத்தில் நாம், உலகம், மாம்சம் மற்றும் பிசாசினால் சூழப்பட்டிருக்கிறோம். இவர்களெல்லாம் புது சிருஷ்டியானது பூரணமாக கிரியை செய்வதை தடுப்பதற்கு சதி செய்கிறார்கள். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" (மத்தேயு 5:8) என்று இயேசு கூறினார். இருதய சுத்தம் பூரணமாக இருக்க வேண்டும்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களின் நோக்கம் சுத்தமாகவும் குறிக்கோள்கள் சுத்தமாகவும், விருப்பம் மேலானதாகவும் இருந்து மேலானதையே விரும்புவார்கள். தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மகிமையான காரியத்தைக் குறித்து தேவனிடத்தில் பலமான சமாதானத்தையும் முழு நம்பிக்கையும் பெற்றிருப்பார்கள். ஏனெனில் இந்த அழிந்து போகக்கூடிய சரீரத்தில் அவர்களால் செய்ய முடிந்ததற்கு மேலாக செய்யக்கூடும். இப்படியாக தங்கள் பக்தியை காண்பிப்பார்கள்.

**R5265**

## The Greatest thing in the Univrese - Part I
## பிரபஞ்சத்திலேயே மேலான காரியம் – பாகம் 1

"முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்." (1கொரிந்தியர் 12:31)

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லை என்று அப்போஸ்தலர் யாக்கோபு அறிவித்திருக்கிறார். எனவே தேவனிடத்திலிருந்து வருகிற எந்த ஈவும் ஆசீர்வாதமாக இருக்கும். தேவன் யாருக்கு இரண்டாம் மரணத்தை கொடுக்கப் போகிறாரோ அவர்கள் கூட உண்மையிலேயே தீமையை பெறுகிறார்கள் என்று கூற முடியாது.

தேவன் அளித்த இந்த பல்வேறு வரங்களை நினைத்துப் பார்க்கையில், சுவிசேஷ யுக ஆரம்பத்தில் சபைக்கு கொடுக்கப்பட்ட இந்த சில வரங்களை அப்போஸ்தலர் பவுல் கணக்கிடுகிறார். சங்கீத புத்தகத்தில் நாம் வாசிக்கிறதாவது: "தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள்ளே வாசம் பண்ணும் பொருட்டு துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களை பெற்றுக்கொண்டீர்? (சங்கீதம் 68:18) அந்த வரங்களில் சில கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களாக ஆனவர்களுக்கு கொடுக்கப்பட்டன. இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எழுந்தருளின பிறகு அவரது சீஷர்கள், அவர் பிதாவினிடத்திலிருந்து பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதத்தையும் வல்லமையையும் அனுப்பும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த பரிசுத்த ஆவி உண்மையான விசுவாசிகள் அனைவருக்கும் வர வேண்டியிருந்தது. இது வெளியரங்கமான வரங்களும், பிரயோஜனமானதும் பயன்படக்கூடியதுமான வெளிப்பாடுகளும் இணைந்தவைகளாயிருந்தது.

நமது தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர்–அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள் என்று கணக்கிடுகிறார். மற்றவர்கள் அந்நிய பாஷை வரங்களையும், குணமாக்கும் வரங்களையும், அற்புதம் செய்யும் வரங்களையும், சாத்தானை விரட்டுகிற வரங்களையும், பாஷைகளுக்கு அர்த்தம் சொல்லும் வல்லமையையும், ஆவிகளை பகுத்தறிதலையும் பெற்றார்கள். சிலர் இவைகளில் ஒன்றையும், சிலர் மற்ற வரத்தையும் பெற்றார்கள். சிலர் பல வரங்களை பெற்றார்கள். பரிசுத்த பவுல் பல்வேறு வரங்களை பெற்றிருந்தார். மற்றவர்களைக் காட்டிலும் அவர் அதிகமாக பாஷைகளை பேசினார் என்று அறிவித்தார். (1கொரிந்தியர் 14:18) ஆதி சபையானது அந்நிய பாஷை வரத்தை மிகவும் உயர்ந்ததாக கருதியதாக தெரிகிறது. இந்த குறிப்பிட்ட வரத்தை தேவனிடமிருந்து பெறுவதற்கு மிகவும் ஆவலாக இருந்தார்கள்.

அவர்கள் மிகவும் ஆவலாக விரும்பிய இந்த அந்நிய பஷை வரத்தைக் காட்டிலும் இன்னும் மேன்மையான ஆசீர்வாதங்களை தேவன் வைத்திருந்தார் என்று அப்போஸ்தலர் அவர்களுக்கு சொல்லுகிறார். அவர்கள் பல்வேறு வரங்களை வேறுபடுத்தி பார்க்க வேண்டியவர்களாக இருந்தார்கள். மனதை பகுத்தறியும் சிறந்த வரத்தை விரும்பி தேர்ந்தெடுக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். அந்நிய பாஷையில் புரியாமல் பத்தாயிரம் வார்த்தைகளை பேசுவதைக் காட்டிலும் தெரிந்த பாஷையில் ஐந்து வார்த்தைகளை பேசுவதையே அவர் விரும்புவதாக அறிவிக்கிறார். அந்நிய பாஷையை விளக்குவதற்காக ஜெபிக்க வேண்டும் என்று அவர்களுக்கு கூறினார். அந்நிய பாஷைகளை பேச விரும்புவதோடு கூட அதை புரிந்துகொள்ளும்படி அதன் அர்த்தத்தை சொல்லவோ அல்லது விளக்கவோ விரும்ப வேண்டும். இந்த பல்வேறு பாஷைகளும், வரங்களும் சபையின் பயன்பாட்டுக்காக கொடுக்கப்பட்டன என்று அவர் கொரிந்து சபைக்கு எழுதின நிரூபத்தில் அதிகாரம் 12 மற்றும் 14 இல் வெளிப்படுத்துகிறார்.

### வரங்களினால் நோக்கம் நிறைவேறியது

அந்த சமயத்தில் அவர்களது குறைவை நிறைவாக்கும் படி அந்நிய பாஷை வரம் கொடுக்கப்பட்டது. ஆதி சபைக்கு வேதாகமம் இல்லை. அவர்கள் ஜெப ஆலயங்களுக்கு புறம்பாக்கப்பட்டிருந்தார்கள். பழைய ஏற்பாட்டை அணுக முடியவில்லை, புதிய ஏற்பாடு எழுதப்படவில்லை. இல்லையென்றால் தேவனுடைய பிள்ளைகளுக்கு இந்த வரங்களின் உதவியோ போதனையோ கிடைத்திருக்காது. சகோதரர்களுக்கு போதிப்பதற்கு யாரும் இல்லை. தேவனுடைய வல்லமை மட்டுமே போதிக்கக் கூடிய திறமையை கொடுக்கக்கூடியதாக இருந்தது, ஆகையால் அவர்கள் சபை கூடி வருவதை விட்டுவிடக்கூடாது என்று அப்போஸ்தலர் பவுல் அவர்களை வலியுறுத்தினார். கிறிஸ்துவின் மாபெரும் நாள் உதயமாவதை அவர்கள் பார்த்ததால் அவர்கள் கூடி வந்து தேவனுடைய திட்டங்களைப் பற்றிய காரியங்களை விவாதிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள்.

அவர்கள் கூடி வந்தபோது, யாராவது ஒருவர் எழுந்து பேசுவது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது, அவர்களின் யாராவது ஜெபிக்கவோ அல்லது பேசவோ விரும்பினால் அது தேவனுடைய வெளிப்பாடாக இருக்கும்.

இந்த முறையில் சபையானது கூட்டி சேர்க்கப்பட்டு இணைத்துவைக்கப்பட்டார்கள், இந்த வழியில் என்ன செய்தி கர்த்தரிடமிருந்து வரும் என்பதை அறியாதிருந்தார்கள்.

இந்த காலகட்டத்தில் மிகவும் ஆழ்ந்த போதனைகளை தேவன் அளித்திருப்பார் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது, புதிய ஏற்பாடு கொடுக்கப்படும் வரை, அது எழுதப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டு கொடுக்கப்படும் வரை அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு இந்த வழியில் பாலகாரத்தை கொடுத்திருப்பார் என்று தோன்றுகிறது, அப்போஸ்தலர் பவுல் இந்த வரங்களுடன் சபையை வழி நடத்தினார். எனினும் அந்நிய பாஷை வரங்களை மற்ற வரங்கள், அவர்களுக்காக செய்யப்பட்ட சில மேன்மையான ஏற்பாடுகள் மிஞ்சும்படி இருந்தன. அவர்கள் நல்ல பேச்சுத்திறமை உள்ளவர்களாக பொது பேச்சாளராக அல்லது அறியாத பாஷைகளுக்கு விளக்கம் சொல்லுகிறவர்களாக இருக்க வேண்டும் என்ற பரிசுத்த பவுல் விரும்பினார். இது கர்த்தருடன் அதிக தனிப்பட்ட தொடர்பு உடையதாக பொருள்படும். ஆகையால் அவர்கள் முக்கியமான வரத்தை நாட வேண்டும்.

மேலும் அப்போஸ்தலர் தொடர்ந்து கூறுகிறதாவது: “இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன்.” அதாவது அவர் விவாதித்துக் கொண்டிருந்த விசேஷித்த வரங்களாகிய அந்நிய பாஷை வரங்களைக் காட்டிலும், அற்புதம் செய்யும் வரங்களைக் காட்டிலும், பாஷைகளுக்கு அர்த்தம் சொல்லுகிறதைக் காட்டிலும் மேன்மையான வழியை காண்பிக்கிறேன் என்கிறார். இவைகளெல்லாம் அழிந்து போகும். இனி சபைக்கு தேவைப்படாது என்றும், அவர் சொல்லப் போகிறவைகள் என்றென்றும் அழியாது என்றும் காண்பிக்கப் போகிறார். ஆகையால் அவர்கள் விசேஷமாக மேன்மையான வரங்களை பகுத்துணர்ந்து நாட வேண்டாம். இந்த பகுத்துணர்ந்து பார்த்து மேன்மையானதை தேர்ந்தெடுப்பது மட்டுமல்ல, இதற்கும் மேலாக இருதயம் அபிவிருத்தி அடைவதற்கானவைகளை நோக்க வேண்டும். இது விசேஷமாக கர்த்தரை சந்தோஷப்படுத்தும். மேலும் இது அவர்களை அவருக்கு நெருக்கமாக கொண்டு வரும்.

இது அன்பு என்று அவர் விளக்குகிறார். அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லும் வரம், அற்புதம் செய்யும் வரம், சுகமளிக்கும் வரம், அந்நிய பாஷைகளை பேசுதல், பாஷைகளுக்கு அர்த்தம் சொல்லுதல் ஆகியவைகளை பெற்றிருந்தாலும் கர்த்தரின் உன்னதமான ஆசீர்வாதங்களை அடைவதற்கு இன்னும் குறைவுபடுகிறார்கள். அவர்கள் அன்பு என்கிற மேன்மையானதை தங்கள் வாழ்க்கைக்குள் இணைக்க வேண்டும். இவர்கள் எவ்வளவு தான் அந்நிய பாஷை வரம், அர்த்தஞ் சொல்லுதல், அற்புதங்கள் செய்தல் முதலானைவகளை பெற்றிருந்தாலும் இந்த அன்பு என்பது மிகவும் முக்கியமானதாக அவர்கள் பெற்றிருக்க வேண்டியதாக இருந்தது, பிறகு அன்பின் பல்வேறு பண்புகளை அவர் கணக்கிடுகிறார். அதாவது சாந்தம், பொறுமை, சகோதர அன்பு முதலானவைகள். இவைகளில் ஒட்டு மொத்த கூட்டு தான் அன்பு ஆகும். அது சகோதரர்களுக்கான அன்பு, நண்பர்களுக்கான அன்பு, அண்டை வீட்டாருக்கான அன்பு, நமது சத்துருக்களுக்கான அன்பு ஆக இருக்கிறது. இது அவர்களுக்கு நன்மை செய்யும்; அவர்கள் துன்பப்படுவதை காண விரும்பவே விரும்பாது. பிறகு இது தான் மிகவும் மேன்மையான காரியம்.

அன்பின் மூலகங்கள் அபிவிருத்தி அடைந்த மூலகங்களாக இருந்தாலும் அவைகள் கனிகள் என்று அழைக்கப்படலாம், அவைகள் வரங்கள் என்றும் அழைக்கப்படலாம். நாம் ஆப்பிள் மரத்திலிருந்து ஆப்பிளையும், பீச் மரத்திலிருந்து பீச் கனியையும் பேரிக்காய் மரத்திலிருந்து பேரிக்காய் முதலானவைகளை நாம் பெறுகிறோம். இந்த ஆவியின் குணலட்சணங்களை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டியிருப்பதால் அவைகள் ஆவியின் கனிகள் என்று அழைக்கப்படுகின்றன. தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் வந்த வெறும் இயந்திர நிலையான வரங்களைக் காட்டிலும் இந்த ஆவியின் கனிகள் மிகவும் மேன்மையானதும் மிகவும் விரும்பப்படத்தக்கதுமாகும். ஏனெனில் அவைகள் விசேஷித்த தேவைகளாக இருந்தன; ஆனால் அவைகளில் பெரும்பாலானவைகள் அப்போஸ்தலரின் மரணத்திற்கு பிறகு கொஞ்ச நாளிலே மறைந்த போயின.

## அன்பு – வகைகளில் வேறுபாடு

அன்பு என்றால் என்ன என்ற கேள்வி சரியானபடியும் இயற்கையாகவும் எழும்புகிறது. வேதாகமத்தில் பதிவானது: “தேவன் அன்பாக இருக்கிறார். தேவனுடைய மகத்துவத்தை முழுவதும் விளக்க முடியாததை போல அன்பு என்ற வார்த்தையில் உள்ளடக்கியுள்ள அனைத்தையும் விளக்க இயலாததாக தெரிகிறது. அன்பு என்பது உலகத்தில் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று. ஆகையால் அன்பானது தேவனை பிரதிநித்துவப் -படுத்துகிறது. ஏனெனில் அவர் தான் தலைமையான சர்வ வல்மையுள்ளவர். நாம் தேவனை இதுவாக இல்லை. அதுவாக இல்லை. மற்றதாக இல்லை என்று கூறுவோம். இதே போல அன்பையும் கூட. அது எதுவாக இல்லை என்று நாம் விளக்கலாம். தேவனுடன் இணைக்கமில்லாத எதுவும் நல்லதாக இருக்க முடியாததைப் போல அன்புடன் இணக்கமில்லாதது எதுவும் நல்லதாக இருக்க முடியாது. அப்போஸ்தலர் அன்பை விவரிக்கும் போது கூறுகிறதாவது: “அது தீங்கு நினையாது; இறுமாப்பாயிராது; சினமடையாது, தற்பொழிவை நாடாது; அநியாயத்தில் சந்தோஷப்படாது முதலியன.”

அன்பு என்கிற நமது வார்த்தை பலவிதமான உணர்வுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். உதாரணமாக கோழியானது தனது குஞ்சுகளிடம் அன்பு செலுத்துகிறது. அவைகளின் மேல் அக்கறை கொள்ளுகிறது. தகப்பனும் தாயும் தங்கள் பிள்ளைகள் மேல் அக்கறை கொண்டு அன்பு செலுத்துகிறார்கள். ஒருவர் பொறுப்பில் இருக்கிறவர்கள் அனைவரும் அன்பின் இந்த அக்கறையில் உள்ளடக்கப்பட்டிருக்கிறார்கள். தேவன் இரக்கம் என்கிற இந்த குணத்தை முழு பிரபஞ்சத்தின் ஜீவனுள்ள உணர்ச்சியுள்ள அனைவர்களிடத்திலும் காண்பிக்கிறார். இவர்களையெல்லாம் கவனிப்பதற்கு அன்பினால் அவர் கட்டப்பட்டிருக்கிறார்.

மானிட அன்பில், சுபாவ அன்பில், இரக்கம் என்பதை பலமுள்ள குணமாக நாம் காண்கிறோம். வெறும் இரக்கமான அன்பைக் காட்டிலும் மேலானதை, மரியாதைக்குரியதை, மெச்சக்கூடியதை, வியக்கத்தக்கதை நாம் பெற்றிருக்கிறோம். இது நாம் நேசிக்கிறவரின் ஒவ்வொரு காரியத்திலும் காண்பிக்கிற உண்மையான ஆழமான அக்கறையாகும். இரக்கமான அன்பு, பூமிக்குரிய அன்பாக இருந்தாலும் ஒன்றுமில்லாததிலே நின்று போகும். சர்வ வல்லவரின் மேல் நாம் வைக்கும் அன்பு மட்டுமே உயர்ந்த ஒன்றாக இருக்கக்கூடும். இந்த நேசமுள்ள அன்பே மேம்பட்டதாக ஆதிக்கம் செலுத்த வேண்டும்.

கர்த்தரின் ஜனங்களுக்கான ஆவிக்குரிய அன்பே பிற்பாடு வருகிறது. அது மாம்சீக முன்னுரிமைகள் அனைத்தையும் தவிர்க்க நாடுகிறது; ஒரு புது சிருஷ்டியாக

வாழவும், புது சிருஷ்டியின் நலன்களை கவனிக்கவுமே நாடுகிறது. இப்படி செய்வதால் தேவனுக்கடுத்த காரியங்களிலும் இந்த சுவிசேஷ யுகத்தின் வேலைகளில் நம்மோடு இணைந்திருக்கிறவர்களோடும் நெருக்கமாக இணைகிறவர்களாகிறோம். எந்தவிதமான ஜீவன்களிலும் இந்த வகையான அன்பே உயர்ந்ததாக இருக்கிறது. இதற்குள் நாம் நுழைந்திருக்கிறோம். தேவன் அன்பாயிருக்கிறார். இந்த சரியான ஆவிக்குரிய அன்பில் நாம் வளருகிற அளவுக்கு நமது பிதாவின் குணலட்சண சாயலில் வளருகிறோம். இது குறித்து நாம் வாசிக்கிறதாவது: "ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராக இருக்கக்கடவீர்கள்." (மத்தேயு 5:48)

இதை பாராட்டுகிறவர்களோடு கூட மட்டும் இந்த அன்பு நிற்காமல் இதை பாராட்டாதவர்களிடமும் செல்கிறது. இந்த அன்பை ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்கு ஏதோ தடை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அன்பானது தேவனுடைய சாயலுக்கு ஒப்பானதாகவும், மிகவும் பாராட்டத்தக்கதாகவும் இருக்கிறது. அது இல்லாமல் வாழ்க்கை பயனற்றதாக இருக்கும். அப்போஸ்தலர் அன்பின் குணலட்சணங்களை, சாந்தம், பெருந்தன்மை, நீடிய பொறுமை, சகோதர அன்பு, தெய்வ பக்தி என்று கணக்கிடுகிறார். இவைகள் எல்லாம் வற்றாத நீரூற்றிலிருந்து ஓடுகிற பிரவாகங்களாக இருக்கின்றன. இவைகள் அனைத்து அன்பிலிருந்து புறப்படுகிற பண்புகள். நமது அன்பு பலமுள்ளதாக இருக்கிறதற்குதக்கதாக அதன் பண்புகளும் பலமுள்ளதாக இருக்கும்.

### நீதிதான் அன்பின் அடிப்படை

அடுத்து, அன்பானது எப்படி தெய்வீக பிரமாணத்தை நிறைவேற்றுகிறது என்பதை நாம் ஆராய்வோம். நல்ல செயல்களை கட்டுப்படுத்துகிற எந்த தெய்வீக பிரமாணமும் தேவையில்லை. உன் சகோதரனுக்கு அதிகமாக செய்யாதே, அதிக பணம் கொடுக்காதே என்று சொல்லக்கூடிய பிரமாணம் எதுவும் தேவையில்லை. இவ்விதமாக சொல்லக்கூடிய பிரமாணம் எதுவும் தேவையில்லை. ஆனால் தெய்வீக பிரமாணம் சொல்லுகிறதாவது: "குறிப்பிட்ட தரநிலையிலிருந்து குறைவுபடாதே." ஆகையால் பிரமாணமானது நீதியைக் கேட்கிறது.

பிரமாணமானது நீதியை கேட்கிறது என்று அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுவதால், நமது செயல் மற்றும் வார்த்தையினால் அண்டை வீட்டாரை கொலை செய்யக்கூடாது. நமது அண்டை வீட்டாரை பொறுத்த மட்டில் எல்லாவற்றிலும் பூரண நீதியுடன் இருக்க வேண்டும். நமது மனதின் ஒவ்வொரு எண்ணமும் நீதியுள்ளதாக, முற்றிலும் நீதியுள்ளதாக இருக்க வேண்டும். இதுதான் தெய்வீக பிரமாணத்தின் திட்ட அளவு. யாருக்காவது நாம் நீதிக்கு குறைவானதை நாம் கொடுப்போமானால் நாம் பிரமாணத்தை மீறுகிறவர்களாக இருப்போம். ஆகையால் யூதர்களுக்கு வைக்கப்பட்டிருந்த பிரமாணமானது எவைகளை செய்யக்கூடாது என்று கூறியது. " பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக," முதலானவைகள், எதை செய்யக்கூடாது என்று சொல்லுகிறது. சகோதரனை சிநேகிக்கிறவன் அவனிடமிருந்து அவனது சொத்தையோ அவனது நல்ல பெயரையோ திருடிக் கொள்ள விரும்பக்கூடாது. இப்படியாக பிரமாணம் கேட்கிற எதையும் அன்பானது நிறைவேற்றுகிறது.

அன்பானது அதன் திறமையில் எல்லையற்று இருக்கிறது. உதாரணமாக, தேவன் மனுக்குலத்தின் மேல் மரண தண்டனையை அறிவித்த பிறகே, அவர் இரக்கமான அன்பை அவர்கள் மேல் அப்பியாசப்படுத்தினார். அந்த மரண தண்டனை இன்னும் நிற்கிறது.

"கலகக்கார மனிதனை இரட்சிக்க

திட்டமிட்டது அன்பே;

அன்பு வரைந்த ஆச்சரியமான திட்டத்தின்

அனைத்து படிகளையும் காட்சிப்படுத்தும்."

ஆதாமை, பிரமாணத்தின் தீர்ப்பிலிருந்து விடுவிக்கும்படியாக அன்பானது மீட்கும் பொருளை கொடுத்து இதைச் செய்திருக்கிறது. இந்த கடமையை நீதியானது! வார்த்தையானவர்! லோகாஸ், மேல் வைக்க முடியாது. ஆகையால் தேவன் கட்டளையிடமுடியாது. இயேசுவுக்கு முன்பாக சில சலுகைகளை வைப்பது மட்டுமே அவரால் செய்யக்கூடியதாக இருந்தது. தேவன் அவருக்கு முன்பாக மனிதருக்கு இரட்சகராக இருக்கும் சந்தோஷத்தையும் மகிமையான ராஜ்யத்தின் சலுகைகளையும், தேவனுடைய அன்பிலும் கிருபையில் உயர்த்தப்படும் சந்தோஷத்தையும் வைத்தார். ஆகையால் அன்பானது பல்வேறு தூண்டுதல்களை பயன்படுத்தியது.

நம்முடனான அன்பு நீதியானதாகவும் இருக்க வேண்டும். நாம் ஒருவருக்கு சொந்தமானதை எடுத்து இன்னொருவருக்கு கொடுக்க இயலாது. அங்கே இரக்கம் இருக்கலாம். ஆனால் அன்பானது நீதியை மீற முடியாது. வேத மாணவர்களாக இருக்கக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு அனுகூலமாக இருக்கிறது. நீதி என்பது என்ன என்ற உண்மையான கருத்துக்களை வேதாகமம் நமக்கு தருகிறது. அது நமக்கு தெளிந்த புத்தியின் சமநிலையைத் தருகிறது. பிதாவானவர் அன்பையும் இரக்கத்தையும் பெற்றிருக்கிறார். ஆனால் அவர் இந்த குணங்களை நீதியின் கொள்கைகளுக்கு ஏற்ப அப்பியாசப்படுத்துகிறார். நாம் நீதிக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அல்ல. நமது சகோதரனை தண்டனைக்கு உட்படுத்தியது நமது பிரமாணமல்ல, ஆனால் தேவனுடைய நீதியின் பிரமாணம். ஆகையால் வெறும் நீதிக்கு அப்பால் அன்பை அப்பியாசப்படுத்த நாம் உரிமை பெற்றிருக்கிறோம்.

இயேசு ஒரு உதாரணத்தைக் கொடுத்தார். ஒருவன் தன் எஜமானனுக்கு பெருந்தொகை கடன்பட்டிருந்தான். ஆனால் அதை அடைக்க முடியாமல் போனபோது அவனது எஜமானன் அவனுக்கு மன்னித்து விட்டான். ஆனால் இவனிடம் கொஞ்ச தொகை கடன்பட்டிருந்தவரை மன்னியாமல் தண்டிக்க ஆரம்பித்தான். நம்மால் பூரண நீதியை கொடுக்க இயலாது. நாம் மற்றவர்களிடம் அதை உரிமையோடு கேட்க முடியாது. பூரணமும் நீதியானவருமாயிருக்கிற தேவனே நீதியை கேட்கக்கூடிய உரிமை பெற்றிருக்கிறார்.

### பொல்லாத எண்ணம் அன்பினாலல்ல

நாம் பார்த்திருக்கிறது போல அன்பானது மாபெரும் உயர்ந்த குணமாகும். இந்த குணலட்சணத்தைக் பல காரியங்களை உள்ளடக்கியிருக்கிறது. ஒவ்வொரு நல்ல குணத்தையும் அது உள்ளடக்கியுள்ளது. அது நீதிக்கு வெளியேயிருந்து கூட மெச்சப்படக்கூடியதாக இருக்கிறது.

"அன்பு தீங்கு நினையாது" என்கிற அப்போஸ்தலரின் கூற்று, அன்பானது தீமைக்கு குருடாயிருக்கும் என்றோ அல்லது அன்பின் ஆவியை உடையவர்கள தீமைக்கு குருடாயிருப்பார்கள் என்றோ குறிப்பதாக புரிந்து கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, அன்பானது தீமையான செல்வாக்கின் தொடர்பினால் தினமும் காயப்படுகிறது. இது காயத்தை உண்டுபண்ணுகிற தீமையான காரியம் என்பதை அறிந்து, அன்பானது அதற்கு உதவி செய்யாது. ஆகையால் அன்பானது குருடல்ல. அது தீமையே இல்லை என்று சொல்லாது: பாவம், சுயநலம் மற்றும் அற்பத்தனம் இல்லை என்று சொல்லாது. இந்த பல்வேறு காரியங்கள் அனைத்தும்

இருக்கின்றன. அன்பில்லாத சகல காரியங்களுடனும் அன்பானது சா்ச்சையில் இருக்கிறது.

தீமை இருக்கிறது என்று அன்பு நினைக்கிறது. இது நாம் அப்போஸ்தலரிடமிருந்து எடுத்த மேற்கோளுக்கு முரண்பாடேயில்லை. மொழிபெயர்ப்பில் உள்ள குறைபாடே இந்த வேறுபாட்டிற்கு காரணம். அன்பு தீங்கு செய்ய எண்ணாது என்பதே சரியான கருத்து. தீமை செய்ய நினைப்பது எது? ஒரு முடிவுக்கு வருவதற்கு அநேக உபாயங்கள் உண்டு என்று பதிலளிக்கிறோம். நாம் சில காரியங்களை பார்க்கிறோம். நாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பல்வேறு வழிகளில் அறிவை பெறுகிறோம். அன்பானது தீமையைப் பற்றிய அறிவை பெறுவது தவறல்ல. அறிவை பெறாதபோது தீமையை நினைப்பது தவறாகும். அன்பானது தீமை செய்ய நினைக்காது.

யாராவது ஒருவர் தீங்கான செயலை செய்வதை பார்த்தால் அல்லது ஏதோ ஒரு வழியில் தீய செயல் செய்யப்பட்டதாக இருந்தால், அது நமது அதிக வரம்புக்கு கீழ் வந்தால். குற்றவாளியை தண்டிக்க "அன்பானது நம்மை தடை செய்யாது. காரியம் வெறும் வதந்தியாகவோ சரியான ரூபகாரம் இல்லை என்றாலோ; அது அப்படி இருக்கும் என்று எனக்கு தெரியவில்லை அதற்கு ரூபகாரம் தேவைப்படுகிறது" என்று அன்பானது உடனடியாக கூறும். அன்பானது ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நிலைமையையும் நன்றாக சிந்திக்க விரும்பும். கொலை நடைபெற்றதாக நாம் கண்டால் யார் செய்தார்கள் என்று நியாயப்படுத்த நினைக்கமாட்டோம். யார் செய்திருக்கக் கூடும் என்று நினைத்து புலன் விசாரணை செய்ய சிந்திப்போம். குறைவான அன்புடையவர்களை நாம் நினைப்போம் . ஆனால் கொலைகாரன் யார் என்பதை அவசரமாக முடிவு செய்யமாட்டோம். ஏனெனில் அவனோ அல்லது அவளோ விரும்பத்தகாத குணலட்சணத்தையும் அன்பற்ற குணலட்சணத்தையும் உடையவராக இருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு சந்தேகத்திற்கான முழு அனுகூலத்தையும் தர வேண்டும். நாம் விசாரணை செய்ய வேண்டும்.

மிகவும் தீவிரமான தவறுகளில் சில, தீமையை எண்ணியே செய்யப்படுகிறதாக தெரிகிறது. ரூபகாரத்துக்கான ஒரு நிழல் கூட இல்லாமல் ஜனங்களுக்கு விரோதமாக தீமை நினைக்கப்படுகிறது. யாரையும் நாம் முற்றிலுமாக இழிவானவர்கள் என்று சொல்லக்கூடாது. மிகச் சிலரே முற்றிலுமாக இழிவானவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தீமையை யாராவது நினைத்தால், கொஞ்சம் நினைத்தால் கூட அவன் அன்பு என்னும் குணலட்சணம் இல்லாதவன் என்று காண்பிக்கிறான். தீமையை நினைக்கிறவன் கொஞ்சம் கூட அன்பே இல்லாதவன் என்று காண்பிக்கிறது. தீமையை நினைத்தால் எண்ணற்றவர்களை துயரங்கொள்ள வைக்கிறது. மற்றவர்களுக்கு தீங்கு நினைப்பதின் மூலம், உலகில் நடந்த போர்களினால் துயரப்படுகிறவர்களைக் காட்டிலும் அதிகமானபேர் துயரப்படுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் தேவனைப்பற்றி போதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது எண்ணத்தையும் வார்த்தையையும் கிரியைகளையும் அதிகமதிகமாக கட்டுப்படுத்த கற்றுக் கொண்டிருக்கிறார்கள். நமது எண்ணங்கள் அன்பானதாக இருக்க வேண்டும்.! நமது எண்ணங்கள் பெருந்தன்மையானதாக இருக்க வேண்டும் ! நீதியானதாக இருக்க வேண்டும்; யாருக்கு விரோதமாகவும் தீய எண்ணத்தை மனதில் இருக்க இடம் கொடுக்கக் கூடாது. மனிதனுடைய பொதுவான சட்டம், காரியங்கள் சரியாக நிரூபிக்கப்படும் வரை யார் மேலேயும் தீர்ப்பு கூறக்கூடாது என்று சொல்லுகிறது மிகவும் தீமையான காரியங்களை செய்து மற்றவர்களுக்கு அதிக துன்பத்தை ஏற்படுத்துகிறவர்கள், மற்றவர்கள் மேல் தீய எண்ணம் கொண்டிருக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தையிலிருந்து இதை ஒரு கட்டளையாக கற்றுக்கொண்டால் நல்லதாக இருக்கும். இழிவுபடுத்தும் சக்தியாகிய தீமை பேசுதல் மற்றும் தீமையை சிந்தித்தல் போன்றவைகளைப் பார்த்து அதிலிருந்து முற்றிலுமாக விலகியிருந்தால் சந்தோஷம் நம்முடையதாகும்.

## "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்"

இந்த போதனையின் அடிப்படையில் – அதாவது நமது சத்துருக்களை சிநேகித்தல் – நமது குணலட்சணம் அபிவிருத்தி அடையும் என்பது தெளிவாகிறது. பழி வாங்குதல் என்பது விழுந்துபோன சிந்தையின், மாம்சீக சிந்தையின் ஒரு சுபாவ குணமாக இருக்கிறது. நாம் அதிகம் சுயநலமுள்ளவர்களாக இருப்பதால் அதிகமாக சாய்ந்து, தீமைக்கு தீமை, அவதூறுக்கு அவதூறு, அடிக்கு அடி கொடுக்கிறவர்களாக இருக்கிறோம்.

நமது கர்த்தர் மிகவும் தலைகீழான ஆவியை போதித்தார். நமது சத்துருக்கள் நம்மை வெறுத்தாலும் பதிலுக்கு நாம் நன்மை செய்து அவர்களை சிநேகிக்க வேண்டும். அவர்களது நிலைமையைக் குறித்து நாம் இரக்கப்பட வேண்டும். அவர்கள் நமக்கு விரோதமாக தொந்தரவு செய்து விரோதமான உணர்வை கொண்டிருந்தாலும் நாம அவர்களை ஆசீர்வதிக்கும்படி நாம் ஜெபிக்க வேண்டும். பரலாகத்திலிருக்கிற நமது பிதாவின் பிள்ளைகளாயிரு –க்கும்படி நாம் இதை செய்ய வேண்டும் என்று கர்த்தர் கூறுகிறார். நாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிரு –க்கிறோம். இந்த வழியில் நாம் அப்பியாசப்படுத்தி குணலட்சணத்தில் அதிகமதிகமாக அவரைப் போலாகிறோம்.

நமது அனுபவத்தின் ஆரம்பத்தில் நாம் இதை ஏன் செய்ய வேண்டும் என்று அறியாதிருக்கலாம். அவரது குணலட்சணத்தை நாம் அபிவிருத்தி செய்தவற்கு இந்த வழியில் அப்பியாசப்படுத்த வேண்டும். சிலர் கேட்கலாம், தேவன் சத்துருக்களை தண்டிக்க மாட்டாரா தண்டிப்பார் "துன்மார்க்கர் யாரையும் தேவன் அழிப்பார்." பாவம் செய்கிறவர்கள் தேவன் தண்டிக்க மட்டாரா? ஆம் பாவம் செய்கிறவர் அனைவரும் துன்பப்படுவார்கள். பிறகு ஏன் இந்த வழியில் நாம் அப்பியாசப்படுத்தக்கூடாது.? ஏனெனில் அப்படி செய்வதற்கு இன்னும் நாம் தகுதி பெறவில்லை. ஏற்ற காலத்தில் நாம் மனுக்குலத்தை நியாயந்தீர்ப்போம். ஆனால் நாம் முதலில் அன்பின் பாடத்தை கற்றுக்கொள்ளும் வரை நாம் தயாராக மாட்டோம். நாம் அவர்களுக்கு செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிற சகல நன்மைகளையும் நாம் அவர்களுக்கு செய்ய தீவிரமாக இருப்போம்.

தேவன் நேசிக்க விரும்பாதவர்களை நாம் நேசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரா? இல்லை. அவர்கள் பாவிகளாக இருந்த போது "தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." தேவனுக்கு மனுக்குலத்தின் மேல் அன்பு இல்லையா? ஆம் அவர் மனுக்குலத்தின் மேல் ஒரு குறிப்பிட்ட அன்பு வைத்திருக்கிறார். அவர் ஒவ்வொரு நீதியான கிரியைக்கும் அதற்கு நீதியான பரிசு கிடைக்கச் செய்வார். அவர் தொடர்பு கொள்ளுகிற அனைவரிடமும் நியாயமான சகிப்புத்தன்மையை காண்பிப்பார். அவர்களுக்கு நன்மை பயக்கும்படி இந்த சகிப்பு தன்மையை விரிவாகவும். இரக்கமான அன்புடனும் செய்ய விரும்புவார்.

நமது சத்துருக்களிடம் இந்த அன்பை நாம் அபியாசப்படுத்தும் போது சமைநிலையற்று இருக்கிற நமது குணலட்சணத்தில் ஒரு பக்கத்தை அபிவிருத்தி செய்கிறோம். இந்த பக்கத்தை நாம் சமநிலைப்படுத்தினால்

மறுபக்கமும் சமநிலையை அடையும். இயற்கையாகவே தவறானது எதுவும் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் நன்மையானது எதுவும் வெகுமதி அளிக்கப்பட வேண்டும் என்றும் நாம் விரும்புவோம். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் நமது அபூரண நிலைமையில் அன்பைக் காட்டிலும், நீதியானது கொஞ்சம் அருகாமையில் இருக்கிறது. ஆகையால் நாம் தேவனால் பயன்படுத்துவதற்கு நாம் அன்பின் குணலட்சணத்தை வளர்க்க வேண்டும். தேவன் ஏன் மனுக்குலத்திடம் இரக்கமுள்ளவராக இருக்கிறார் என்பதை பார்க்கிறோம். துன்மார்க்கர் அனைவருக்கும் அவர் பட்சிக்கிற அக்கினி. அதாவது சுத்தமில்லாத ஒவ்வொன்றையும் அவர் எதிர்க்கிறார். அது சீக்கிரத்திலோ, கொஞ்சம் காலம் தள்ளியோ அழிக்கப்படும்.

நமது மானிட குடும்பத்தில், மனித இனத்தில், குறிப்பிட்ட தேவனின் தன்மையை தேவன் காண்கிறதினால்தான் அவர் அவர்களோட தொடர்பு கொள்ளுகிறார் என்று நிச்சயிக்கிறோம். மனிதர்களை தேவன் தீயவர்களாக மட்டுமே, தொடர்ந்து தீயவர்களாகவே பார்த்திருந்தால் அடுத்த யுகத்தில் மனுக்குலம் இழந்ததை திரும்ப பெறுதலுக்கான ஏற்பாடுகளை தேவன் செய்திருக்க மாட்டார் என்று நாம் நிச்சயமாக உணருகிறோம். தேவன் சில மனித குடும்பங்களை தீமையை காட்டிலும் அதிக நன்மை செய்கிறவர்களாக பார்ப்பதினால் தான் இந்த நித்திய ஜீவனை கொடுப்பதற்கு இரட்சிப்பிற்கான கஷ்டங்களையும் நேரம் முதலானவைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார். தேவன் இதற்கிடையில் நித்திய காலத்துக்கும் அவர்களுக்கு உதவிகரமாயிருக்கக்கூடிய தற்கால அனுபவங்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

### சத்துருக்களிடத்தில் நமது சரியான அணுகுமுறை

ஆரம்பத்தில் தேவனுக்கு சாத்தானிடத்தில் அன்பு இருந்திருந்தால் கூட, இப்பொழுது சாத்தானை அவர் நேசிக்கிறார் என்று நாம் நினைக்கக்கூடாது. ஆனால் சாத்தான் இப்பொழுது தீயவனாக, துஷ்ட குணமுடையவனாக இருப்பதால் தேவன் அவனை நேசிப்பது தவறாக இருக்கும். நாமும் அவனை நேசிப்பது தவறானதாக இருக்கும். உலக நிலைமையைக் கூட நாம் நேசிக்கக் கூடாது. நாம் தேவனுக்கும் உலகப் பொருட்களுக்கும் ஊழியம் செய்ய முடியாது. நாம் தேவனையும் உலகப் பொருளையும் சிநேகிக்க முடியாது. ஏனெனில் அவைகள் எதிரிடையானவைகள். ஆனால் சாத்தானைப் பொருத்த வரை நாம் அவனை அவதூறாய் பேசவேண்டியதில்லை! நிந்தையான மனோபாவத்தை வெளிப்படுத்த வேண்டியதில்லை. அவன் தேவனுடைய சத்துரு. அந்த காரியத்தை தேவன் நம்மைக் காட்டிலும் சிறப்பாக கவனிக்கக்கூடியவராக இருக்கிறார். ஆகையால் நாம் சாத்தானை நியாயந்தீர்க்கவோ நிந்திக்கவோ கூடாது. மிகாயேல் கூட தூஷணமாக குற்றப்படுத்தவில்லை என்று நாம் வாசிக்கிறோம். நாம் வாசிக்கிறதாவது: “கர்த்தர் உன்னை கடிந்துகொள்ளுவராக.” (யூதா:9)

நாம் முடிந்தவரை நன்மை செய்யவும் முடிந்தவரை உதவிகரமாகவும் இருக்கவும் வேண்டும். நாம் நியாயம் தீர்க்கவோ ஆணையிடவோ தகுதியுள்ளவர்கள் அல்ல. ஆகையால் நாம் முழுவதும் அடக்கமுடையவ -ர்களாயிருப்பது நமது கடமையாக இருக்கிறது. ஏற்ற காலத்தில் கர்த்தர், பிழையின் கொள்கைளுக்கு மறுபாடான நீதியின் கொள்கைகளை வெளிப்படுத்துவார்: அவர் ஏற்ற காலத்தில் நியமித்த வாய்க்கால் வழியாக நீதியான தீர்ப்பை கொடுப்பார்.

தற்காலத்தில் அறியாமையினால் சபைக்கு சத்துருக்களாக காணப்படுகிறவர்களை பொருத்தவரை, அவர்களிடம் நாம் இரக்கமான அன்பை, சகோதர அன்பை அல்ல, காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்களில் யாரையும் தேவன் தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.அவர்கள் மேல் அவர் வெறும் அனுதாப அன்பை காட்டுகிறார். அவர்களுக்கு எந்த தீங்கும் இழைக்க விரும்பில்லை. மாறாக, அவர்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார். சீக்கிரத்தில் அவர்கள் பாவ நிலைமையிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வருவதற்கு வேண்டிய அனைத்தையும் அவர்களுக்கு அளிப்பார். சகல மானிட குடும்பங்களும் இப்படி இருப்பதற்கு அவர்கள் தெரிந்து செய்த பாவத்தினால் அல்ல. அவர்களது விழுந்து போன நிலைமையினால் தான் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுவோம். நியாயத்தீர்ப்பை பொருத்தவரை நியாயந்தீர்க்க இப்பொழுது நமக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை.

இந்த கருத்தை எடுத்துக்கொண்டு நமது இனத்தில் சிலர் ஒரு திசையிலும் மற்ற சிலர் வேறு திசையிலும் விழுந்தார்கள் என்று நம் உணருகிறோம். எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள். தேவன் அழைத்திருந்த மகிமையின் தர நிலையை இழந்தார்கள். தெய்வீக அனுதாபம் நமக்கே தேவைப்படுகிறது. மற்றவர்களுக்கு அனுதாபத்தை கொடுப்பதில் நாம் சந்தோஷம் அடைய வேண்டும்.

**R5269**

## “He cometh with clouds”

## “அவர் மேகங்களுடனே வருகிறார்”

“இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரை குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தார் எல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள்.” –வெளிப்படுத்தல் 1:9

நமது கர்த்தராகிய இயேசு தமது இரண்டாம் வருகையில் முழு மானிட குடும்பதற்கு தெரியும்படியாக வருவார் என்பதற்கு ஆதாரமாக இந்த வேத வாக்கியம் பொதுவாக குறிப்பிடப்படுகிறது. அவர்கள் அவரைப் பார்க்கும் பொழுது அவர்கள் அனைவரும் அழுது புலம்புவார்கள். அது அவர்களுக்கு ஒரு துக்கமான நாளாக இருக்கும். விசேஷமாக யூதர்களுக்கு மற்ற வேத வாக்கியங்களின் வெளிச்சத்தில் இந்த வேத வாக்கியங்களின் நமது கருத்து மாறானதாக இருக்கிறது. ஆரம்பத்தில் நமது கர்த்தரே கூறினதாவது: “இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னைக் காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள்.” நமது கர்த்தரின் உண்மையான சீஷர்கள் மட்டுமே அவரை காணக்கூடியவர்களாக இருந்தார்கள். இயேசுவின் சீஷர்கள் அவரைக் காண்பார்கள், ஏனெனில் அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலின் ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவார்கள்” என்று அப்போஸ்தலர் பவுல் விளக்குகிறார். நமது கர்த்தரின் தற்போதைய நிலைமை, ஆவிக்குரிய நிலைமையில் பரலோக நிலைமையில் இருக்கிறார்.

“உலகம் உண்டாகிறதற்கு முன்னே,” கர்த்தர் உலகத்திற்கு வருவதற்கு முன்னே அவருக்கு தேவனிடத்தில உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது அவரை மகிமைப்படுத்தும்படி கர்த்தர் பிதாவினிடத்தில் ஜெபித்தார். தேவன் அவரை மகிமைப் -படுத்தியிருந்ததாகவும் இன்னும் மகிமைப்படுத்துவதாகவும் உறுதியளித்தார். (யோவான் 17:5; 12: 28) நமது கர்த்தர் மகிமையடைந்த நிலையில் தூதர்களுக்கும் கர்த்தத்துவங்களுக்கும் வல்லமைகளுக்கும் மேலான நிலைமையில் இருக்கிறார். பிலிப்பியர் 2:9,10 “அவர்

மனிதனாக இருந்த போது தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்தார்.'' (எபிரேயர் 2:6,9) நமது கர்த்தர் இப்போது பிதாவின் தன்மையின் சொரூபமாயிருக்கிறார். (எபிரேயர் 1:3) மேலும் "அவர் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறார்.'' என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன.

கிறிஸ்துவின் வருகையானது உலகத்தை ஆசீர்வதிப்பதற்காக என்று இன்னொரு வேத வாக்கியம் நமக்கு கூறுகிறது. அவரது வருகையின் நோக்கமானது பரிதாபகரமான மற்றம் விழுந்துபோன இனத்தை உயர்த்துவதற்காக ஆகும். பரிசுத்த பேதுரு "இளைப்பாறுதலின் காலங்கள்'' மற்றும் "உலகத் தோற்றம் முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்'' வரும் என்று நமக்கு கூறுகிறார். (அப்போஸ்தலர் 3:19-21)

இந்த கடைசி கூற்றை நாம் எப்படி அவர் மேகங்களுடன் வருவார், கண்கள் யாவும் அவரைக் காணும், முழு மனுக்குலமும் அவரைப் பார்த்து புலம்புவார்கள் என்ற வசனத்துடன் எப்படி இசைவுப்படுத்தப் போகிறோம்? மேகங்களுடனே வருகிறார் என்பது மற்ற வேத வாக்கியங்களுக்கு இசைவாக துன்பத்தின் நாட்களைக் குறிக்கிறது. "மேகங்கள்'' என்பது துன்பத்தை இருளான நாளைக் குறிக்கிறது. அவர் மேகங்களில் வருகிறார். அந்த சமயத்தில் அவர் தம்மை உலகத்துக்கு முதலில் வெளிப்படுத்துகிறது "இருளான நாளாக இருக்கும். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் இதுவரைக்கும் சம்பவியாத உபத்திரவகாலம்.'' இனிமேலும் சம்பவியாது என்று நமக்கு சொல்லப்படுகிறது. ( மத்தேயு 24:21) அது மேகம் சூழ்ந்த இருளான ஒரு நாளாக இருக்கும்.

அந்த நாளில் இறுதியில் கண்கள் யாவும் திறக்கப்படும். சகல மனுக்குலமும் தங்களது புரிந்துகொள்ளும் கண்களினால் அவரைக் காண்பார்கள். நாம் இப்போது "அவரைக் காண்பது போல காண்பார்கள். அதாவது அவரைப் பற்றியும் பிதாவானவரைப் பற்றியும் அறிந்து கொள்வார்கள். ஒரு குருடன் இதே அர்த்தத்தில் காண்பான். அவன் சொல்லுகிறான். நான் இப்பொழுது காண்கிறேன்.'' அதாவது அவனது அறிவின் கண்களால் அவரைப் பார்க்கிறான். இயற்கையான கண்களால் காண்பதைக் காட்டிலும் அறிவின் கண்களால் காண்பது மிகவும் சிறந்தது.

இப்பொழுது இருளானது பூமியை மூடிக் -கொண்டிருக்கிறது. "அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.'' ( 2 கொரிந்தியர் 4:4 ) தற்காலத்தில் மனக்கண்கள் குருடானவர்கள் அநேகர் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் வருகையின் நோக்கத்தை அவர்கள் அறியார்கள். அவர் ஏன்; வருகிறார் என்பதற்கான வேத போதனைகள் அவர்களிடத்தில் இல்லை. ஆனால் அவர்களது குருடான கண்கள் திறக்கப்படும். ஆபிரகாமுக்கும் அவரது காலத்திற்கு பிறகு சகல தீர்க்கதரிசிகளுக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தின்படி "பூமியிலுள்ள சகல வம்சங்களும்'' ஆசீர்வதிக்கப்படுவதற்காகவே கர்த்தரின் ராஜ்யம் என்கிற உண்மையை சகல மனுக்குலம் அறிந்து கொள்வார்கள்.

யூதர்கள் அவரை கண்டுணர்ந்து கொள்வார்கள். அப்போஸ்தலர் பவுல் கூறுவதாவது: புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும். இந்த பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். (ரோமர் 11:25,26) அதாவது இயேசுவின் முதலாம் வருகையின் போது அவர்களிடத்திலிருந்து இரட்சிக்கப் -படுவார்கள். இன்னொரு வேத வாக்கியம் கூறுகிறதாவது: "மனுஷ குமாரனுடைய அடையாளம் காணப்படும். அதை அவர்கள் பார்க்கிற போது, மனுஷ குமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். (மத்தேயு 24:30) குத்தினவர்களும் அவரை நோக்கி பார்த்து ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காக புலம்புகிறது போல அவருக்காக புலம்புவர்கள். (சகரியா 12:16) அவர்கள் அவரை சரியாக உணர்ந்து கொண்டு திறக்கப்படும் முதலாவது கண்கள் அவர்களுடையதாக இருக்கும். ஆனால் அதே சமயம் இயற்கையான கண்களால் பார்க்கக் கூடியது எதுவும் இருக்காது.

எல்லாவற்றிற்கும் முதலாவது கிறிஸ்துவின் பிரசன்னம், அல்லது பரோஷியா இருக்கும். இது அவரது மணவாட்டி வகுப்பாராகிய அவரது சபைக்கு மட்டுமே தெரியும். பரோஷியாவில் அவரது வேலையின் உச்சக்கட்டம், முதலாம் உயிர்தெழுதலில் சபையை தன்னிடத்தில் சேர்த்துக் கொள்வதாகும். அவர் பழிவாங்கும் எரிகிற அக்கினியில் வெளிப்படுத்தப்படுவார். வேத என்று வாக்கியங்கள் கூறுகின்றன.

"வானத்தின் மேகங்கள்'' பொதுவாக குழப்பத்தை குறிப்பிடுகின்றன. உலகமானது அவரது பிரசன்னத்தை அறியாதபடி சில காலம் இருக்கும். ஆனால் அவர்கள் இந்த யுக முடிவில், மகா ஆபத்தான நாளில், கோபத்தின் நாளில் அறிந்து கொள்ளுவார்கள். பிறகு அவர்கள புலம்புவார்கள். முழு உலகமும் புலம்பலில் இருக்கும். உலகமானது கடந்த காலத்தில் புலம்பலில் இருந்திருந்தால் நாம் இன்னும் அதிகமான புலம்பலை, ஆபத்து பொதுவாக இருக்கும் போது எதிர்பார்க்கலாம். துன்பத்தின் மத்தியில் அவர்கள் தேவனுடைய மகிமையை படிப்படியாக கற்றுக்கொள்வார்கள். மகிமையான மேசியாவின் ராஜ்யத்துக்கு வழி நடத்தும்படியாக மனித சுய நலமானது ஒதுக்கி தள்ளப்பட்டது என்பதை அவர்கள் காண்பார்கள். இந்த ராஜ்யத்தின் மூலம் தான் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற சகல ஆசீர்வாதங்களும் வரும்.

---


ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. **C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :


சகோ. **R. செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com


**FOR PRIVATE CIRCULATION ONLY**